பக்கங்கள்: 16+IV= 20

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (30-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:04

# நேற்று பூரண ஹர்த்தால்! குடாநாடு செயலிழந்தது!!

## காயமடைந்தவர் நேற்றிரவு மரணம்

யாழ்ப்பாணம்,நவ.30

நாரந்தனையில் நேற்றுமுன்தினம் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்தது.

படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த யோகலிங்கம் கமல்ஸ்ரன் (வயது 22) என்பவரே நேற்றிரவு 9 மணியளவில் உயிரிழந்தார். இவர் ரெலோ அமைப்பின் தீவிர ஆதரவாளராவார்.

கூட்டணியின் ஆதரவாளரான ஏரம்பு மேரம்பலம் என்பவர் ஏற்கனவே உயிரிழந்தது தெரிந்ததே. (ஜ-10-15)

## மக்கள் உணர்வுபூர்வ ஆதரவு

யாழ்ப்பாணம்,நவம்பர்30

**தமிழர் கூட்டமைப்பின் பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது நேற்றுமுன்தினம் தீவகத்தில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலால் யாழ்.குடாநாடு முற்றாகச் செயலிழந்தது.**

**நேற்றைய ஹர்த்தாலுக்கு குடாநாட்டின் மூலை முடுக்கு எங்கும் பொதுமக்கள் உணர்வு பூர்வமாக ஆதரவு நல்கியதாக பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.**

கூட்டமைப்பு வேட்பாளர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிக்காட்டவும் -

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பொதுமகனுக்கு அஞ்சலி செலுத்தவும் -

வடக்கு - கிழக்கு எங்கும் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிக்க அடையாள அட்டை சமர்ப்பிப்பதைக் கட்டாயமாக்குக!

### யாழ். வந்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.குடாநாட்டில் வாக்களிக்கச் செல்வோர், தமது ஆளடையாளத்தை நிருபிப்பதற்கு அடையாள அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தும்படி தேர்தல் ஆணையாளரிடம் சிபாரிசு செய்யப் போவதாக ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கணகாணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இக்குழுவின் தலைவரான ஜோன குஸ்னஹுரான், ஐரோப்பிய யூனியனின் இலங்கைத் தூதுவர் இல்கா உசிற்றாலோ மற்றும் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த மேரி கனாஸ், யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருந்து இயங்கும் இரு கண்காணிப்பாளர்களான றொபேட், ஜெறாட் ஆகியோர் நேற்று உதயன் பணிமனைக்கு விஜயம் செய்தனர். இங்கு ஆசிரியர் பீடப் பிரதிநிதிகளுடன் உரையாடிய போது குழுவின் தலைவர் குஸ்னஹுரான் மேற்படி தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் புதனன்று இங்கு வந்திறங்கியதும் தீவகத்தில் தமிழர் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தாக்குதலுக்கு

(2ஆம் பக்கம் பார்க்க)



இளவாலையில் நேற்று சூட்டுக்கு இலக்கான ஐ.தே.க. ஆதரவாளர்

### வன்செயல்கள் பரவும் ஆபத்து

## மகேஸ்வரனின் கூட்டத்தில் சரமாரியாக துப்பாக்கி வேட்டு!

### அவர் அருந்தப்பு; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.30

இளவாலைப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டத்தின் மீது ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இளவாலை பொலீஸ் நிலையத்துக்கு சமீபமாக நடைபெற்ற பிரசாரக் கூட்டத்துக்கு வந்திருந்த மக்களை நோக்கியே 'பிக்-அப்' வாகனமொன்றில் வந்த ஆயுததாரிகள் சரமாரியாகச் சுட்டனர்.

இதில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெகசோதி ஜெகராஜ் (வயது21) என்பவர் இடது கையில் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 6 மணியளவில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூட்ட மேடையில் இருந்த தம்மை இலக்கு வைத்தே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் -

தாம் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் -

தமக்கு அருகில் இருந்த தமது காவலர் ஒருவரே கையில் காயமடைந்தார். எனவும் -

தமது மெய்ப்பாதுகாவலர்கள் தம்மை நிலத்தில் வீழ்த்தி தனக்கு மேலே கிடந்து சூடு தன்னில் படாத வகையில் காப்பாற்றியதாகவும் -

ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

ஈபீடிபியின் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் தலைமையில் 'பிக்-அப்' வாகனத்தில் வந்தோரே கண்மூடித்தனமாக இத்தாக்குதலை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

(உ-9-10-15)

பருத்தித்துறையில் வாள்வெட்டுக்கு இலக்கான ஈ.பி.டி.பி. ஆதரவாளர்.



### நெல்லியடி, வல்வையில்

## ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் நேற்றுத் தாக்கப்பட்டன!

யாழ்ப்பாணம்,நவ.30

வாகனத்தில் வந்திறங்கி நெல்லியடி பொலீஸ் நிலையத்துக்கு அருகிலும், வல்வெட்டித்துறையிலும் உள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகங்களுக்குள் ஆத்திரத்துடன் புகுந்த கோஷ்டி ஒன்று, அங்கிருந்த பொருள்களையும், உடைமைகளையும், பெயர்ப்பலகை போன்றவற்றையும் அடித்து நொறுக்கி அட்டகாசம் புரிந்தது.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஐ.தே.கட்சி மற்றும் தமிழர் கூட்டமைப்பினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈபிடிபி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த இரு கட்சியினரும் அதனை அடியோடு மறுத்து விட்டனர்.

தீவகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினர்மீது நடத்தப்பட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி காக்க கோருகிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்,நவ.30

ஆத்திரப்பட்டு - உணர்ச்சி மேலீட்டால் - வன்செயல்களில் இறங்காமல் அமைதிபேணுங்கள்.

இவ்வாறு தமது ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் விநயமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தீவுப்பகுதியில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலின் எதிரொலியாக குடா

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. தரப்பினர்மீது ஐ.தே.கவினர் தாக்குதல்!

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.30

பருத்தித்துறை மெதைக் கடைச் சந்தியில் ஓட்டோ ஒன்றில் வந்த ஈ.பி.டி.பியின் ஓர் உறுப்பினர் மற்றும் இரு ஆதரவாளர்கள் மீது ஐ.தே.கட்சியினர் என்று கூறப்படுவோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின்போது ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

ஒரு பிஸ்ரலுடன் ஐ.தே.கட்சியினரிடம் சிக்கிய மற்றைய இருவரும் நையப் புடைக்கப்பட்ட பின்னர் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அவர்கள் வைத்திருந்த பிஸ்டலும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈபிடிபி. உறுப்பினர் சிவராசா பாபு என்பவரும் சகோதரர்களான சின்னராசா ஜெகதீஸ்வரன் (ஜெகன்) சின்னராசா அசோக் ஆகியோரே தாக்கப்பட்டவர்களாவர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



தமிழர் உரிமைக் குரல். சிங்கள பேரினவாதிகள் மத்தியில் ஓங்கி ஒலித்திட

ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை

சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர் விடுதலைக் கூட்டணி

(93914)

சின்னம் | இலக்கம் 4



நேற்றைய ஹர்த்தாலால் வெறிச்சோடிக் கிடந்த யாழ். பஸ்நிலையப் பகுதியையும் கடைத் தொகுதி ஒன்றையும் படத்தில் காணலாம். (படம்:-பொ. இராஜேஸ்வரன்)

## நெல்லியடியில் பார்சல் குண்டு

தென்மராட்சி,நவ.30

நெல்லியடி சந்தியில் நேற்றுக் காலை அநாதரவாகக் காணப்பட்ட பாஸல் ஒன்றினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சந்தியில் கடமைக்கு வந்திருந்த பொலீஸார் அந்தப் பார்ஸலில் குண்டு இருப்பதைக் கண்டுபிடித்தனர். குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினரை அழைத்து அந்தக் குண்டை செயலிழக்கச் செய்தனர். (ஐ-117-173)

## இளைஞர் சுட்டுக்கொலை

வவுனியா,நவ.30

வவுனியா, தோணிக்கல் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (ஐ-10)

# உணர்ச்சி வசப்பட்டு எவரும் வன்முறையை நாடவேண்டாம்!

## மாவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.30

"இது எமது இனவிடுதலைப் போரின் முக்கியமான கட்டம். உணர்ச்சி வசப்பட்டு வன்செயலில் ஈடுபடாதீர்கள். கண்ணியமாக நடந்துகொள்ளுங்கள்."

- இவ்வாறு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார் தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட பிரமுகருமான மாவை சேனாதிராஜா.

நேற்றுமுன்தினம் நாரந்தனையில் இடம்பெற்ற கொடூரத் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் அவர் அங்கிருந்தவாறு பொதுமக்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

ஓர் அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளுவதற்காக ஊர்காவற்றுறைக்கு வாகனங்களில் சென்றிருந்தோம். நாரந்தனைக்கு அண்மையில் எமது வாகன அணி சென்றிருந்தபோது இரும்புக் கம்பிகள், பாரிய பொல்லுகள், இரும்புச் சங்கிலிகள், வாள்கள், பல துப்பாக்கிகள் ஆகியவற்றுடன் ஒரு பாரிய வாகனத்தில் வந்தவர்கள் எம்மை வழிமறித்தனர். அந்த வாகனத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பி. இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருந்தனர். பின்னர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து, கூரிய ஆயுதங்களால் எம்மைத் தாக்கி, இரத்தக்களரியை ஏற்படுத்தினர். அப்போது எமது வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்த நாம், இக்கொடூரமான - காட்டுமிராண்டித்தனமான - செயலினால் எமது பெறுமதிமிக்க இரு உயிர்களைப் பலிகொடுத்து விட்டு வேதனையைச் சுமந்து நிற்கின்றோம்.

இதுவரைகாலமும் அரச பயங்கரவாதத்திற்கு நம்மவரைப் பலிகொடுத்த நாம், தமிழரின் சுதந்திரத்திற்கே தம்மை அர்ப்பணிக்கின்றோம் என்ற முனைப்புடன் ஆயுதமேந்திய நமது இளைஞர்களால், அதே இலட்சியத்திற்காக அஹிம்சை வழியில் போராடும் நாம் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும் கொடூரமானது மட்டுமன்றி எமது இன விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது கறை படிந்த சம்பவமாகும்.

இன்றைய தேர்தலானது எமது விடுதலையின் ஒரு மைல்கல்லாகும். இதன் பெறுபேறுகள் ஜனநாயக ரீதியில் எமது இனத்தின் குரலை ஒலிக்க வைக்க இருக்கின்றன. இதனால் எமது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் எதுவித வன்முறையிலும் ஈடுபடாது மிகக் கண்ணியமான முறையில் செயற்படவேண்டியது அவசியமாகின்றது.

எவராவது உணர்ச்சி வசப்பட்டு, வன்முறைகளில் ஈடுபடவேண்டாம் என்று மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். சகல விதத்திலும் பொறுமையைக் கடைப்பிடித்து, உங்களுக்குரிய ஜனநாயகக் கடமையைத் தக்கவாறு நிறைவேற்றுவதன் மூலமே நிராயுதபாணிகளாகிய எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்குத் தகுந்த பதிலை அளிக்க முடியும். துன்பத்தை விளைவிப்பவர்களிலும் பார்க்க, துன்பத்தைத் தாங்குபவர்களே ஈற்றில் வெற்றிபெறுவர் என்ற கோட்பாட்டிற்கமைய இறுதியில் வெற்றி எமக்கே என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# கிரனேட் வீச்சுச் சம்பவத்துக்கு பல்கலை மாணவர் கண்டனம்!

## நேற்று கொடும்பாவி எரிப்பு! நாளை பேரணி!!

யாழ்ப்பாணம்,நவ.30

பல்கலைக்கழக மாணவரின் விடுதி மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலுக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள ஒருமித்த கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் கிரனேட் வீசப்பட்ட செயலுக்கு தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தினர்.

அதன்பின்னர் அமைச்சரும் ஈ.பி.டிபி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி அங்கு எரிக்கப்பட்டது. முதலில் கொடும்பாவியை வளாகத்துக்குள் கட்டி இழுத்துச் சென்ற மாணவர்கள் பின்னர் அதனை கட்டடம் ஒன்றில் கட்டித் தொங்கவிட்டு கற்கள் மற்றும் பொல்லுகள் கொண்டு தாக்கினர். இறுதியில் அதனை தீ மூட்டி எரித்தனர்.

தொடர்ந்து நண்பகல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மண்டபத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

நாரந்தனைச் சம்பவம், மாணவர் விடுதி மீது கிரனேட் வீசப்பட்டமை ஆகியவற்றுக்கு மாணவர் சமூகத்தின ஒன்று திரண்ட எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்குடன் நாளை சனிக்கிழமை யாழ்நகரில் அமைதிப் பேரணி ஒன்றை நடத்த மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

(ஐ-4-6-10)

# நேற்று பூரண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாப் பிரதேசங்களிலும் நேற்று ஹர்த்தால் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டதால் அன்றாட அலுவல்கள் முற்றாக ஸ்தம்பித்துப் போனதாக உதயன் பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்.நகரில் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மற்றும் வங்கிகள், சினிமா திரையரங்குகள் மூடப்பட்டன. வீதிகள் போக்குவரத்து இன்றி வெறிச்சோடின. வழமையாக ஹர்த்தால்களின் போது திறக்கப்படும் மருந்தகங்கள், தேநீர்க் கடைகள்கூட நேற்று மூடப்பட்டுக் கிடந்தன.

பல இடங்களில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சோக இசையும் ஒலிபரப்பப்பட்டது. வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. மினிபஸ், ஓட்டோ சேவைகளும் நடைபெறவில்லை.

அரச அலுவலகங்களுக்கு மிகக குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களே வருகை தந்தனர். தவணை இறுதித் தினமான நேற்று மாணவர்கள் வருகை தராததால் பாடசாலைகள் வெறுமையாகக் காணப்பட்டன. சில பாடசாலைகளில் மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்பட்டு உடனடியாகவே அவர்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

வடமராட்சியிலும், வலிகாமத்திலும் பிரதான சந்தைகள் இயங்கவில்லை. சில இடங்களில் ஒழுங்கைகளுக்குள் சந்தைகள் சிறிதுநேரம் கூடின.

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து பெரும்பாலான மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லவில்லை.

சுன்னாகம், நெல்லியடி, பருத்தித்துறை, மானிப்பாய்ப் பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டு வீதிகள் வெறிச சோடிக் காணப்பட்டன.

பொருள்களை இறக்குவதற்காக நேற்றுக் காலை காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த இரு கப்பல்கள் தொழிலாளர்கள் எவரும் வராததால் பொருள்களை இறக்காமலேயே திரும்பின.

### மட்டக்களப்பில்......

மட்டக்களப்பில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாக இருந்தது. பாடசாலை சென்ற மாணவர்களும் காலை 10.00 மணியுடன் வீடு திரும்பி விட்டனர்.

வாகனப் போக்குவரத்துக்களும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. யாழ்.தீவக சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தப்பட்டது. ஊர்வலமும் சுபராஜ் படமாளிகை முன்றிலில் இருந்து ஆரம்பமானது. வேட்பாளர்கள் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் ஏனைய வேட்பாளர்களான பொன்.செல்வராசா, பிரசன்னா, அ.செல்வேந்திரன், வெற்றிமலை ஆகியோருடன் கட்சி ஆதரவாளர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

### திருகோணமலையில்......

தமிழர் விடுதலைக் கூட்டணி திருகோணமலை மாவட்ட கிளையினால் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் பாடசாலைகள், அலுவலகங்கள் என்பன இயங்கவில்லை. வியாபார ஸ்தாபனங்கள், வங்கிகள் என்பனவும் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்தும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

நேற்று தமிழ், சிங்கள பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக மூடப்பட விருந்தன. ஆயினும் ஹர்த்தால் காரணமாக மாணவர்கள் எவரும் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. மாணவர்கள் சனிக்கிழமை அழைக்கப்பட்டு அன்றைய தினம் விடுமுறைக்காக மூடப்படும் என பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

'அஹிம்சைவாதிகளை வாள் கொண்டு அடக்காதே', 'எட்டப்பர்களே வெளியேறுங்கள்', 'பேரினவாதிகளுடன் சேர்ந்து பேயாட்டம் ஆடாதே', ஈ.பி.டி.பியே யாழ்ப்பாணத்தில் உன் அராஜகம் இன்னும் சில நாள்களுக்குத்தான்' என்ற சுலோகங்களை ஊர்வலத்தில் சென்றோர் குரல் எழுப்பிச் சென்றனர்.

ஊர்வலக்காரர்களை கோட்டை முனைப் பாலத்தில் இருந்த பொலீஸார் தடுத்து நிறுத்தினர். ஆயினும் ஊர்வலத்தில் சென்றோர் தடையையும் மீறிச்சென்றனர். காந்தி சிலை மைதானத்தில் ஊர்வலம் முடிவுற்றது. யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவத்தை கிழக்கு பல்கலைக்கழக சமூகம், தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் உட்பட பல அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

மக்கள் கொதிப்படைந்தவர்களாக காணப்படுகின்றனர். இதனால் ஈ.பி.டி.பியினர் மட்டக்களப்பில் புளியந்தீவை விட்டு வெளியேற முடியாத நிலை காணப்படுகின்றது. மட்டக்களப்பு நகரில் ஆயுதங்களுடன் ஈ.பி.டி.பியினர் பிரசார பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

(ஐ-4-6-9-10-11-15-17-51-86-118-173)

# கிரனேட் வீச்சுச் சம்பவம் மாணவர் மீதான பழிவாங்கல்!

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.30

கொக்குவிலில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் விடுதி மீது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சுச் சம்பவம் மாணவர்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகும்.

யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இத்தாக்குதல் சம்பவமானது மாணவர் சமூகம் மீதான ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மாணவர் சமூகத்தினை வன்முறைக் கலாசாரத்திற்கு இட்டுச் செல்கின்ற ஒரு நிகழ்வாகவே இது தெரிகின்றது.

ஜனநாயகம், சகோதரத்துவம், மக்கள் நலன், அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றில் அதிக அக்கறை எடுப்பவர்கள் என்று தம்மைக் காட்டுபவர்கள், இத்தகைய தாக்குதல்கள் மூலம் சாதிக்கப்போவது என்ன?

பல்வேறு இன்னல்களுக்கும், கெடுபிடிகளுக்கும் மத்தியில் கல்வி கற்கும் மாணவர் சமூகத்தை சீண்டிப் பார்க்க நினைப்பது ஒரு புத்திசாதுரியமற்ற செயலாகும். இக்கீழ்த்தரமான செயற்பாட்டை எவர் செய்திருந்தாலும் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவர். தீவகத்தில் திட்டமிட்டு கூட்டமைப்புமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர் சமூகம் குரல கொடுத்ததுக்கும், மாணவர் விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் தொடர்புள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. தமிழர்களின் உரிமைக்காக தமிழ் மாணவர் சமுதாயம் குரல் கொடுப்பது தவறா?

ஜனநாயக நாட்டில் விரும்பிய ஆட்சியாளரைத் தெரிவுசெய்வதற்கும் அது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஆனால் இச் சுதந்திரம் காலம்காலமாக மறுக்கப்பட்டே வருகின்றது. இதற்குக் காரணம் தமிழ் தேசவிரோத ஆயுதபாணிகளே ஆவர். இதற்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்பதில் தமிழர்களாகிய நாம் அனைவரும் உறுதியாக நின்று, ஒருமித்து குரல் எழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். எனவே, இனிமேலும் இத்தகைய மாணவர் சமூகம் மீதான தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும் என பதை யாழ்.உயர்தொழில்நுட்ப சமூகமாகிய நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். (ஐ-10)

# வாக்களிப்போர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கான இடத்துக்குச் சென்று பார்வையிட்டோம். பல தரப்புத் தகவல்களையும் பெற்றுக்கொண்டோம்.

அது திட்டமிட்டு, பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் (Planed Ambush) என்பது தெளிவு.

இந்தத் தாக்குதலை நடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட டிரக், அதற்குச் சற்றுமுன்னர் பொலீஸ் காவல் நிலை ஒன்றைத் தாண்டிச் சென்றிருக்கின்றது. அத்தோடு இரண்டு சீருடை தரித்த பொலீஸாரும், மூன்று சீருடை தரிக்காத பொலீஸாரும் தாக்குதலுக்கு இலக்கான அணியில் இருந்திருக்கின்றனர். எனவே புலன்விசாரணை நடத்தி தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல என நினைக்கிறோம். இந்தச் சம்பவம் தொடர்பாக அரசு தரப்பில் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளையும் நாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றோம்.

குடாநாட்டில் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்துவதற்காக இரண்டு முக்கிய சிபாரிசுகளை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்க இருக்கின்றோம்.

☆ வாக்களிக்க வருபவரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டையைக் கோருவதை கட்டாயப்படுத்துதல்.

☆ குடாநாட்டில் தேர்தலில் குதித்துள்ள சகல கட்சிகளினதும் பிரமுகர்கள் தேர்தல் பிரசாரத்துக்கு தீவகத்துக்கு தாராளமாகச் சென்று வருவதற்கும், தேர்தல் தினத்தன்று சகல கட்சிகளினதும் பிரதிநிதிகள் அங்கு வாக்களிப்பு நிலைய முகவர்களாகச் செல்வதற்கும் போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

யாழ்குடாநாட்டில் அடையாள அட்டையின்றி எவரும் வாழ முடியாது என்ற நிலையில் இந்த சிபாரிசு யாருடைய உரிமையையும் பாதிக்காது என்று கருதுகின்றோம்.

இந்த சிபாரிசுகள் தொடர்பாக தேர்தல் திணைக்களமும் ஆணையாளரும் எடுக்கப் போகும் நடவடிக்கைகளை நாங்கள் உன்னிப்பாகக் கவனிப்போம்.

தேர்தல் நீதியும் நியாயமுமாக நடத்தப்படுவதற்கு சகல கட்சிகளும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

சட்டத்தின் ஆட்சியை சகல கட்சிகளும் ஏற்று அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

இங்கு தேர்தல் ஒழுங்காக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பொலீஸ் மா அதிபர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார் என்பதையும் நாம் உன்னிப்பாகக் கவனிக்கவிருக்கின்றோம் - என்றார்.

# வின்மீனை சுற்றும் புதியகிரகம் பிரபஞ்சத்தில் கண்டுபிடிப்பு!

நாஸா,நவ.30

நமது சூரிய மண்டலத்துக்கு வெளியே வெகுதொலைவில் நட்சத்திரமொன்றை சுற்றிவரும் கிரகமொன்றின் புறத்தோற்றத்தை முதன்முறையாக 'நாஸா' விஞ்ஞானிகள் நேரடியாகக் கண்டறிந்துள்ளனர்.

**புதிய கிரகம் பற்றி 'நாஸா' வெளியிட்ட ஓவியப் படம்**



பூமியிலிருந்து 150 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ள - எச்.டி.209458 என்று விஞ்ஞானிகளால் அடையாளம் காணப்படும் - மஞ்சள் நட்சத்திரத்தை சுற்றிவரும் கிரகத்தின் புறவெளித் தோற்றத்தையே விஞ்ஞானிகள் நேரடியாக கண்டறிந்தனர்.

விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள 'ஹப்பிள்' விண்தொலைநோக்கி ஊடாக பிரபஞ்சத்தை ஆராய்ந்த விஞ்ஞானிகள் சூரியனைப் போன்று நிலையாக உள்ள நட்சத்திரத்தை, பூமியைப் போல் ஓர் ஒழுங்கில் சுற்றிவரும் மேற்படி கிரகத்தின் புறத்தோற்றத்தைக் கண்டறிந்தனர். (ஒ)

# நகரங்கள் வடக்குக் கூட்டணியிடம்; சுற்றியுள்ள மலைகள் தலிபானிடம்!

## ஆப்கானின் இன்றைய நிலை இதுதான்

காபூல்,நவ.30

ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதி வடக்குக் கூட்டணி வசம்வந்துவிட்டதாகக் கூறப்படுவதில் பல வித சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

பிரதான நகரங்கள் மட்டுமே வடக்குக் கூட்டணியின் வசம் உள்ளதாகவும் -

அந்த நகரங்களைச் சுற்றியுள்ள மலைப்பிரதேசங்களில் மறைந்துள்ள தலிபான் போராளிகள், அவ்வப்போது, வடக்குக் கூட்டணியினர் மீது திடீர்த் தாக்குதல்களை தொடுப்பதாகவும்-

அப்பிரதேசங்களுக்குச் சென்று திரும்பிய வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்குக் கூட்டணி வசமுள்ள காபூல், ஜலலாபாத், குண்டூஸ் ஆகிய நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமெரிக்கவான் தாக்குதல்கள் இப்போதும் தொடர்ந்து நடப்பது இதனை உறுதிப்படுத்துவதாகவும் அவர்கள் கூறினர்.

**உலக அரங்கில்**

தமது இடங்களைவிட்டு நீங்காமல், தொடர்ந்து புனிதப் போரை நடத்துமாறு தலிபான் தலைவர் முல்லா முகமட் ஒமர் விடுத்த அறைகூறவலை அவரது தளபதிகள் ஏற்று யுத்தத்தைத் தொடர்கிறார்கள்.

இவ்வாறு மறைந்திருந்து தலிபான்கள் நடத்தும் தாக்குதலில் - மஷார் ஏ ஷெரீப் நகருக்கருகே அமெரிக்க உலக அமைப்பான சி.ஐ.ஏயைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாக சி.ஐ.ஏ.இன் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஆப்கானில் தங்கியுள்ள ஆயிரக் கணக்கான அல்கெய்தா அமைப்பினர் போராடத்தயாராக உள்ள தலிபான் வீரர்களுடன் கலந்துவிட்டதாக நம்பப்படுகிறது.

பின்லேடனின் ஆலோசகரான லெப டினன்ட் மொகமட் அலெக்ஸ் உட்பட அல்கெய்தாவின் பிரதான தலைவர்கள் பலரும் அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்ததாகவும் -

இரண்டாம் மட்டத் தலைவர்கள் இறந்தவர்களின் இடத்தை நிரப்பி வருவதாகவும் -

'பென்டகன்' தெரிவித்தது. (ஒ)

## ஹேரத்திலிருந்து காபூலுக்கு

# உணவு ஏற்றிச்சென்ற லொறிகள் அமெரிக்கத் தாக்குதலில் அழிப்பு!

## 4 ஓட்டுநர்கள் உயிரிழப்பு

காபூல்,நவ.30

காபூலுக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் மீதும் அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் போக்குவரத்துச் சேவைகளை தாம் இடைநிறுத்தியுள்ளதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானின் மேற்குப் பகுதி நகரான ஹேரதிலிருந்து தலைநகர் காபூல் நோக்கிச் செல்லும் வாகனங்கள் மீது, கண்மூடித்தனமாகத் தாக்குதலகள் நடத்தப்படுவதாக போக்குவரத்து நிறுவனங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

கடந்த இரண்டு வார காலத்தில் சுமார் 30 லொறிகள், அமெரிக்கத் தாக்குதல்களுக்கு இலக்காகி முற்றிலுமாக அழிந்ததாகவும் -

குறைந்தது 4 ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் ஆகியோர் இதில் உயிரிழந்துள்ளதாகவும் -

இதனால் காபூல் போக்குவரத்துக்கு ஓட்டுநர்கள் மறுப்பதாகவும் - கூறப்படுகிறது.

காபூலை நோக்கிச் செல்லும் வாகனங்கள் தலிபான்களின் வலுக்கோட்டையாக உள்ள கந்தகார் வழியாகவே செல்ல வேண்டும். இந்தப் பாதையில் சென்ற லொறிகளே தாக்கியழிக்கப்பட்டன.

இதனால் ஈரானிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு இறக்குமதியாகும் உணவு மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் காபூலை சென்றடைய முடியாமல் உள்ளன. (ஒ-4)



ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கடைசி வலுக்கோட்டையாகவுள்ள கந்தகாரிலிருந்து வெளியேறும் குடும்பம் ஒன்றைப் படத்தில் காணலாம். ஆப்கானில் கடும் குளிர் நிலவுவதால் அவ்வாறு வெளியேறும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

## மெக்ஸிகோ பாடசாலையில்

# 'கவர்ச்சி உடை' ஆசிரியைகளுக்கு தீ மூட்டிய தலைமையாசிரியர்

மெக்ஸிகோசிற்றி,நவ.29

கவர்ச்சிகரமாக உடையணிந்து பாடசாலைக்கு கடமையாற்ற வந்த இரண்டு ஆசிரியைகளை தலைமை ஆசிரியர் தீயிட்டார்.

மெக்ஸிகோவின் கரீபியன் கடலோர மாவட்டமான யோகட்டானில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இங்குள்ள உயர்தரப் பாடசாலையொன்றின் இரு ஆசிரியைகளில் ஒருவர் இறுக்கமான காற்சட்டையும், மற்றவர் குட்டைப்பாவாடையும், ரீ சேட்டும் அணிந்து கடமைக்கு வந்தனர்.

அவர்களை ஓரினச் சேர்க்கையாளர்கள், தசை வியாபாரிகள் என்று வசை கூறிய தலைமையாசிரியர் அவர்களைப் பணியிலிருந்து இடைநிறுத்தினார்.

இது தொடர்பாக ஆசிரியைகள் இருவரும் தலைமையாசிரியருடன் வாக்குவாதம் செய்தபோது, அலுவலகக் கதவுகளைப் பூட்டிய தலைமை ஆசிரியர் லூயிஸ் ஒஜேடா, ஆசிரியைகள் மீது எரிபொருளைத் தெளித்துத் தீ மூட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார். (ஒ)

## கொலம்பிய தங்கச் சுரங்கத்தில் நிலச்சரிவு!

கொலம்பியாவில் தங்கச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் 100 பேர் உயிருடன் புதையுண்டனர்.

கடும் மழைக்கு மத்தியில் சுரங்கத்தில் சட்டவிரோதமாக தங்கத்தை அகழ்ந்துகொண்டிருந்த பொதுமக்களே நிலச்சரிவில் உயிரிழந்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தத்தால் நிர்வாகச் சீர்குலைவுக்குள்ளாகியுள்ள கொலம்பியாவில் சட்டவிரோதமாக தங்கம் அகழ்வது வழக்கமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## கடும் எதிர்ப்பின் மத்தியில்

# அமெரிக்காவில் 'குளோனிங்' மூலம் முதல் மனித முளையம் தயாரிப்பு

வாஷிங்ரன்,நவ.30

அமெரிக்க நிறுவனம் ஒன்று உலகில் முதற்றடவையாக மனித முளையம் ஒன்றை 'குளோனிங்' செய்துள்ளது. இதற்கு உலகளவில் பலத்த எதிர்ப்புக்கிளம்பியுள்ளது.

ஏ.ரி.பி. என்ற அமெரிக்க நிறுவனம் மனித கலத்திலிருந்து 'குளோனிங்' முறையைப் பயன்படுத்தி மனித முளையம் ஒன்றை முதன்முறையாகத தயாரித்துள்ளதாக கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.

இந்த அறிவிப்பு உயிரினங்களைப் பிரதியெடுக்கும நடைமுறை தொடர்பான பலவித கேள்விகளை எழுப்பியுள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் 'தார்மீக அடிப்படையில் மனித குளோனிங் தவறானது' என்று கூறியுள்ளார்.

மனித சமுதாயத்தின் வரையறைகள் மறப்பட்டுவிட்டதாக வத்திகான கத்தோலிக்க திருச்சபை கூறியுள்ளது.

இவை போன்ற கண்டனங்களை நிராகரித்த ஏ.ரி.பி. நிறுவனம், தனது ஆராய்ச்சிப் பணிகள், புதிய மனிதனை உருவாக்கும் நோக்கமுடையதல்ல. பர்கின்ஸன் போன்ற பலவித நோய்களைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையொன்றை உருவாக்குவதே தமது திட்டம் என்று கூறியுள்ளது. (ஒ-4)

## தமிழக அமைச்சர் பதவி நீக்கம்

சென்னை,நவ.30

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த திருமதி வளர்மதி ஜெபராஜ் அமைச்சரவையிலிருந்து பதவி விலக்கப்பட்டார்.

முதலமைச்சரின் பரிந்துரைப்படி தமிழக ஆளுநர் அவரைப் பதவி விலக்கினார்.

வளர்மதி ஜெபராஜின் சகோதரர் ஒருவர் அரசு அதிகாரி ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படுவதையடுத்தே அவர் பதவி விலக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. (ஒ-9)

## ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற

# படுகொலைகள் பற்றி விசாரிக்க மன்னிப்புச் சபை கோரிக்கை!

காபூல்,நவ.30

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியில் ஈடுபட்ட தலிபான்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

மஷார் ஏ ஷெரீப் நகரின் அருகே உள்ள கோட்டையில் வடக்குக் கூட்டணிப் படைகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சரணடைந்த மற்றும் பிடிபட்ட தலிபான்கள் கிளர்சியில் ஈடுபட்டதையடுத்து, அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாக வடக்குக் கூட்டணி அறிவித்தது.

சம்பவம் இடம் பெற்ற கோட்டைக்குள நேற்றுமுன்தினம் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும், செய்தியாளர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு நூற்றுக்கணக்கான தலிபான்களின் சடலங்கள் சின்னா பின்னமாகிக் கிடப்பதாகவும் -

கைக்குண்டுகள், வெடிகுண்டுகள் என்பனவற்றின் சிதறல்கள் கோட்டை வளாகம் முழுவதும் சிதறிக் கிடப்பதாகவும் -

செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பதை அறிய செஞ்சிலுவைச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கோட்டைக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த தலிபான் கைதிகள் முறையாக நடத்தப்படவில்லை என்றும் -

அதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்த போதே கிளர்ச்சியில் ஈடுபடுவதாகக் கூறி கொன்று குவிக்கப்பட்டதாகவும் -

குற்றசாட்டுகள் எழுந்துள்ளன.

ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாக பிரிட்டிஷ், அமெரிக்க அரசுகள் கருத்து எதனையும் வெளியிடவில்லை. (ஒ-4)

## ஆரம்பக் கல்வி குறித்துக் கவலை

புதுடில்லி,நவ.30

உலக நாடுகள் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்ற போதிலும், 2015ஆம் ஆண்டிலும் பல குழந்தைகள் ஆரம்பக் கல்வியைக் கூடப் பெறமுடியாமற் போய்விடும்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவர் திருமதி மேரி ரொபின்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டளவில் சகல குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்க வகை செய்யும் தீர்மானம் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் -

தற்போது உலகில் சுமார் 10கோடி குழந்தைகள் கல்வி பெறாமல் உள்ளனர். இவர்களில் 6 கோடி 60 லட்சம் பேர் பெண் குழந்தைகளாவர் என்றும் -

மேரி ரொபின்சன் சுட்டிக்காட்டினார். (ஒ-9)


தமிழினத்தின் விடுதலைக்காக!
தமிழ் மக்களின் விடிவுக்காக!!
போடுங்கள் புள்ளடி

**பொதுத் தேர்தல் - 05.12.2001**

தியாகம் - உண்மை - நேர்மை - தொண்டு இவையே இவரது இலட்சியம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

X இல. 1

திரு. சீ. சிவமகாராசா அவர்களை ஆதரியுங்கள்!

உங்கள் வாக்கு உதயசூரியனுக்கே!



(94859)

# பல்கலை ஊழியரின் பூதவுடல் கைலாசபதிஅரங்கில் அஞ்சலிக்கு

## நாளை காலை வைக்க ஏற்பாடு

தீவுப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக தாவரவியல்துறை ஆய்வு கூட உதவியாளரான ஏரம்பு பேரம்பலத்தின் பூதவுடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இந்த அஞ்சலிநிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளதாகவும்- அரசியல் அடாவடித்தனத்திற்குப் பலியான எமது அங்கத்தவருக்கு அனைவரும் அஞ்சலி செலுத்துமாறும் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதவேளை —

யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் ஒலிபெருக்கி மூலம் சோக இசையும் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. (க-6)

# நிந்தவூரில் நள்ளிரவு வேளை கிளைமோர் குண்டுத் தாக்குதல்

## அதிரடிப்படைசிப்பாய் பலி; மூவர் காயம்

அம்பாறை மாவட்டம் நிந்தவூரில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றுக்குப் பாதுகாப்பு வழங்கிவிட்டுக் காரைதீவு முகாம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் இந்தக் கிளைமோர் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க-4)

## லயன்ஸ் சுகாதார தினத்தை முன்னிட்டு

# இலவச மருத்துவ முகாம் நாளை இணுவிலில் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 30

லயன்ஸ்சுகாதாரதினத்தை முன்னிட்டு மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், தென்னிந்திய திருச்சபை, யாழ் ஆயரினதும், இணுவில் லயன்ஸ் கழகத்தினதும் அனுசரணையுடன் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை இணுவில் மக்லியட் வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

மகப்பேற்று நிபுணர் டாக்டர் ஜி. பவானி, வைத்திய நிபுணர் டாக்டர் கே. மகேசன் மற்றும் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகளான சத்திரசிகிச்சைப் பிரிவு டாக்டர் என். ஸ்ரீஸ்கந்தராசா மருத்துவப் பிரிவு டாக்டர் கே. இரத்தினசிங்கம் ஆகியோர் இந்த முகாமில் கலந்து கொள்வர்.

வசதியற்றோருக்காக நடத்தப்படும் இந்த மருத்துவ முகாமில் தென்னிந்திய திருச்சபையினால் இலவசமாக மருந்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# கண்ணீர் அஞ்சலி

அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநரும்,
சமூக சேவையாளரும்,யாழ். பல்கலைக்கழக ஊழியருமான

## அமரர் ஏரம்பு பேரம்பலம்

அவர்களின் அகால மரணம் குறித்து அறவழிச் சமூகம் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் நெஞ்சம் நெகிழ்ந்து தெரிவித்துக் கொள்கின்றது.

அறவழிப் போராட்டக்குழு
- NVDAG -

29, கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

(95372)

# மங்களகரமான திறப்பு விழா

## () அனுஷன் திரையரங்கு ()

நிகழும் கார்த்திகை மாதம் இன்று (30-11-2001) வெள்ளிக்கிழமை காலை 8 45 — 10. 00 மணி வரையுள்ள சுப நேரத்தில் எம்மால் புதிதாக நிர்மாணிக்கப்பட்

அனுஷன் திரையரங்கு

வலிமேற்கு பிரதேச சபைத் தலை ர்

**திரு. ந. திரிலோகநாதன் அவர்களால்**

திறந்து வைக்கப்படும்.

மங்கள விளக்கேற்றல்: **திரு. வே. பொன்னம்பலம்**

(உரிமையாளர், பாக்கியரத்தினம் கட்டடப்பொருள் விற்பனை நிலையம், சங்கானை)

காலை 10. 00 மணிக்கு,

சிவாஜி — கே. ஆர். விஜயா நடித்த

★ கந்தன் கருணை ★

பிற்பகல் 2. 30 மணிக்கு,

ரஜனி — நக்மா நடித்த

★ பாட்ஷா ★

நிர்வாகி
அனுஷன் சினிமா, சங்கானை.

(95371)

# நூலகர் பரீட்சை வகுப்புகள் ரத்து

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டு வரும் நூலகர் பரீட்சைக்கான வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் நடைபெறமாட்டா என்றும் —

அடுத்த மாதம் 8ஆம்திகதி சனிக்கிழமை முதல் வழமை போல் வகுப்புக்கள் நடைபெறும் என்றும் —

பல்கலைக்கழக நூலகர் அறிவித்துள்ளார். (க-7)

# பல்கலை ஊழியர் சங்கம் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அறிந்து நாம் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம்.

—இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்களின் மூலம் மாணவர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறித்துவிட முடியாது என்பதை இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-6)

# கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 30

பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்க மாதாந்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு புலோலியில் இயங்கும் பளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க-4)

# கொக்குவிலில் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.30

தென்னிந்தியச் திருச்சபையின் கொக்குவில் புனித அந்திரேயர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை4.30 மணிக்கு ''தொற்று நோய்கள்'' என்னும் தலைப்பில் கருத்துரை இடம்பெறும்.

இக்கருத்துரையில் இரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் என்பவற்றைப்பற்றி ஜி. நக்கீரன் கருத்துரை வழங்குவார். (க-ரீ)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

இன்று (30. 11. 2001) வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த வெளிவாரி பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வு நடைபெறும் திகதி பின்பு அறிவிக்கப்படும்.

பதிவாளர்

29. 11. 2001

# இளம் பெண் ஷெல்லுக்குப் பலி

திருகோணமலை, நவ.30

மூதூர், சேனையூரில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிய முருகேசு கவிதா (20 வயது) என்ற இளம் பெண் உடல் சிதறிப் பலியானார்.

மூதூர் படை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டு சேனையூர்ப் பகுதியில் வீடு ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்ததில் இந்த யுவதி கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-4)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா கந்தசாமி

(நகைக்கடை உரிமையாளர், சுன்னாகம்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா - கந்தசாமி 28-11-2001 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்லம்மாவின் மூத்த மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வராசா (பிரான்ஸ்), ஜெயராசா (பிரான்ஸ்), ஜெயராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதாம்பாள் (பிரான்ஸ்), பமிலா (பிரான்ஸ்), கிருஷ்ணசாமி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும், வதனாதேவி, ரமேஷ்நாத், அஷ்வினி, சிவாஜினி, நிசாவினி, பிரியங்கா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராமசாமி, எங்கரசு மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**மனைவி, மக்கள்.**

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

(95370)

## திருமதி ஞானாம்பிகை நாகேந்திரம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் காரைதீவு மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை நாகேந்திரம் (28-11-2001) புதன்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் முத்துவேலு தம்பதியினரின் இரண்டாவது புதல்வியும், நாகலிங்கம் நாகேந்திரத்தின்(R.F.O) அன்பு மனைவியும், சந்திரகாந்தா,கமலாதேவி,விமலாதேவி, செல்வராணி (நூலகர் வலி. மேற்கு பிரதேச சபை), சந்திரவதனா, சகுந்தலா (E. C. G தொழில் நுட்பவியலாளர் கல்முனை), ராஜினி (ஆசிரியர்), நாகபாலன் (எழுதுவினைஞர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-11-2001) வியாழக்கிழமை மட்டக்களப்பு காரைதீவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி செல்வராணி பாக்கியநாதன்**
(மகள், நூலகர்)
**திரு. சண்முகநாதன் [தவம்]**
(சகோதரர்)

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(95369)

## ஏரம்பு பேரம்பலம்

(யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட உதவியாளரும், இலங்கை செஞ்சிலுவைச்சங்க வேலணைப் பிரிவு உறுப்பினரும், அறவழிப் போராட்டக்குழு இயக்குநரும்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், 198/1, பொன்னப்பா லேன் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு பேரம்பலம் நேற்று முன்தினம் (28-11-2001) புதன்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு மாரிமுத்து அவர்களின் அன்பு மகனும், திரு. ஆறுமுகம் தெய்வானை அவர்களின் அன்பு மருமகனும், இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், மோகனகாந் (யாழ். இந்துக்கல்லூரி), அகல்யா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),கவியரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமி, இராசையா ஆகியோரின் சகோதரனும், ஆ. பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரம், இராசேந்திரம், பாலேந்திரன் (U K), தவமலர், குலேந்திரன் (ஜேர்மனி), சிவனேந்திரன் (ப.தெ.வ.அ.கூ.சங்கம், வேலணை), முருகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01-12-2001) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு 198/1, பொன்னப்பா லேன், யாழ்ப்பாணம் என்ற அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆறுமுகம் (J.P) குடும்பத்தினர்.**
(வேலணை)

198/1, பொன்னப்பா லேன்,
யாழ்ப்பாணம்.

(95368)

## உதயன்

## ஆள்மாறாட்டத்தை தடுக்க...

நேற்றுமுன்தினம் தீவகத்திற்குப் பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது படுபயங்கரமான முறையில் - காட்டுமிராண்டித்தனமாக - அநாகரீகமான விதத்தில் - நடத்தப்பட்டிருக்கும் கொடூரத் தாக்குதல், படித்த யாழ். குடாநாட்டு சமூகத்தையே அதிர்ச்சியில் உறையவைத்திருக்கின்றது.

தீவகத்துக்குப் பிரசாரத்துக்குச் செல்வோர் அச்சுறுத்தப்படுகின்றார்கள்; தாக்கப்படுகின்றார்கள் என்று பல்வேறு முறைப்பாடுகள் பல ஆண்டுகளாக வெளிப்படுத்தப்பட்டுவரும் நிலையில், இப்போது அது நிஜத்தில் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

இந்தத் தாக்குதல் நடந்த தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள், இத்தாக்குதல் தொடர்பான சகல விடயங்களையும் சேகரித்துள்ளனர்.

அதேசமயம் -

நேற்று வடமராட்சியில் ஒரு கட்சியின் அலுவலகங்களை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்.

ஜனநாயகத் தேர்தலில் 'வன்முறைக்கு வன்முறை' வழி அல்ல என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று நாள்களில் குடாநாட்டில் தேர்தல் நிலைமை வன்முறைப் பாதையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்ற அச்சநிலை தோன்றியுள்ளது.

இதன் விளைவு குடாநாட்டில் புத்துயிர்க்கும் ஜனநாயகத்துக்கு முழு சாவுமணி அடிப்பதாக அமைந்துவிடலாம் என்பதைச் சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

இந்தப் பின்னணியில், யாழ்.குடாநாட்டு நிலைமைகளைப் பரிசீலனை செய்த ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இரண்டு முக்கிய விவகாரங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் ஆலோசனை - சிபாரிசு - செய்யவிருக்கின்றனர்.

ஒன்று - குடாநாட்டில் வாக்களிக்கச் செல்லும் சகலரிடமும் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டையைக் கோருமாறு வற்புறுத்தும் விதிகளை நடைமுறைப்படுத்தல்.

மற்றையது - தீவகத்துக்குச் சகல கட்சிகளும் பிரசாரத்துக்குச் செல்ல - குறிப்பாகத் தேர்தல் தினத்தன்று அச்சமின்றிச் சகல கட்சிகளினதும் வாக்களிப்பு முகவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல - உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மூன்று விதமான அடையாள அட்டைகளை வைத்திருக்கின்றார்கள். அடையாள அட்டையின்றி ஒருவர் குடாநாட்டில் வசிப்பது என்பது இயலாதகாரியம்.

எனவே வாக்களிப்பில் ஆள்மாறாட்டத்தைத் தடுப்பதற்கு இந்த விதிமுறையை ஏற்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, அவர்களின் பல்வேறு அடிப்படை உரிமைகள் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மூலமும், சட்டரீதியாக நிறைவேற்றப்படாத ஒழுங்கு விதிகள் மூலமும் பறிக்கப்பட்டு வந்துள்ளன.

குடாநாட்டில் அடையாள அட்டையின்றி வீட்டை விட்டு வீதிக்கு இறங்கமுடியாது என்று கூறுமளவுக்கு இங்கு அடிப்படை உரிமைகள் பேணப்படும் (?) போது -

வாக்களிப்பதற்கு வருவோரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த அடையாள அட்டையைக் கோருவது அதிலும்விடப் பெரிய உரிமைமீறல் விவகாரமாகிவிடப்போவதில்லை.

வாக்களிப்பில் ஆள்மாறாட்டம் நடப்பதற்கு இடம்கொடுக்கக் கூடாது - நேர்மையாக வாக்களிப்பு நடைபெறவேண்டும் - என்று எதிர்பார்ப்பவர்கள், எதிர்பார்க்கும் அரசியல் கட்சிகள் அடிப்படை உரிமை என்று குறிப்பிட்டு இந்த நடைமுறையை நிராகரிக்காமல், அதனை வரவேற்கவேண்டும்.

# நாரந்தனை தாக்குதல் சம்பவம் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு

கொழும்பு,நவ.30

தீவுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் குமரகுருபரன் நேற்றுமுன்தினம் மாலை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்தார்.

"புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாதுகாப்பு இல்லை என்பதால் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதில்லை. அவை வேறு இடங்களில் அமைக்கப்படுகின்றன. அதுபோல தீவகமும் பொலீஸாரின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆயுதக்குழு ஒன்றின் சர்வாதிகாரத்தின் கீழ் அது உள்ளது எனத் திரும்பத் திரும்ப நாம் கூறிவந்தோம். அதனை நாரந்தனைச் சம்பவம் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே தீவக வாக்களிப்பு நிலையங்களைப் பிரதான நிலப்பரப்பில் வைத்து வாக்காளர்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்" - என்று குமாரகுருபரன் கோரினார்.

இது விடயத்தில் பொலீஸ் மா அதிபரின் கருத்தைப் பெற்ற பின்னர் தான் முடிவுசெய்வதாக தேர்தல் ஆணையாளர் தம்மிடம் பதிலளித்தார் என்று குமரகுருபரன் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் குறித்து தாங்களும் தேர்தல் முறைப்பாடு செய்திருப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு இவ்விடயத்தைத் தாம் உடன் கொண்டு வந்ததாகவும் -

அவர் இவ்வியடம் குறித்து தேர்தல் ஆணையாளருடன் உரையாடியிருப்பதாகவும் -

ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

## வேலணையில் ஐ.தே.க. கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.30

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை வேலணையில் நடைபெறும் எனவும் - அதில் தாமும் கலந்துகொள்வதாகவும் -

ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,நவ.30

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பௌர்ணமி ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

காயத்திரி மந்திர ஜெபம், பண்ணிசை, சொற்பொழிவு, பஜனை என்பன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும். (ஐ)

## வடமராட்சியில் சுவரொட்டிகள்

வடமராட்சி,நவ.30

தமிழ் அரசியற் கட்சி ஒன்றுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் வடமராட்சிப் பகுதியில் நேற்று பரவலாகக் காணப்பட்டன.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்ற வாசகத்துடன் கண்ணீர் வடிக்கும் வீணையின் உருவம் அவற்றில் வரையப்பட்டிருந்தன.

(ஐ-173)

## யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் முத்துக்குமாரு அரங்கில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி சமாதிலிங்கம் சத்தியசீலன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைகழக கல்வியற்றுறை விரிவுரையாளர் திருமதி அனுஷியா சத்தியசீலன் பரிசில்களை வழங்குவார்.

(க-7)

## சகஸ்ர கலச சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்.நவ.30

நல்லூர் ஸ்ரீகைலாசபிள்ளையார் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சகஸ்ர கலச சகித சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்துக்கான கிரியைகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிராம்மணதேவ அனுக்ஞையுடன் ஆரம்பமாகும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மகா அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து சகஸ்ரகலச சங்காபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-7)

## நாட்டு நடப்பு

### ஒழுக்கத்தைக் காத்த நாடு

வழுக்கை ஆறு ஒன்றுதான் இந்த மண்ணில்
வளைந்து நெடுந்தூரம் ஓடிச் செல்லும்
ஒழுக்கமாய் நீர் இதனில் ஓடியதாய்
ஒருபோதும் வரலாறு இங்கில்லை
முழுதுமாய் வாவிகளோ குளங்கள்தானே
முன்னும்தான் இன்றும்தான் இங்கேயில்லை
வழுவிலா நீர் நிலைகள் எங்கேனும் இல்லை
வற்றாத கிணறுண்டு நிலாவரையில்
ஒழுக்கம் தான் இம்மண்ணில் நீராய் ஓடி
ஓங்குபுகழ் சேர்ந்ததிந்த மண்ணுக்கென்றும்
பழுதிலா ஒழுக்கம் ஒன்றைக் காத்தே
பார்புகழ் வாழ்ந்ததிந்த பைந்தமிழர் நாடு
எழுந்திரடா; ஒழுக்கத்தை நாளும் காத்து
ஏற்றமிகு இந்நாட்டை காப்பாய் நீயே!

*விகடகவி.*

# அடிமைப்பட்டு அழியும் சமுதாயமாக நாம் ஒருபோதும் மாறமாட்டோம்

## சித்தன்கேணி பிரசாரக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா

சண்டிலிப்பாய்,நவ.30

"இந்நாட்டில் தமிழ்த்தேசிய இனத்தின் பொது எதிரியாக சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. பேரினவாத அரசுகளுக்கு நாம் அடிபணிய மாட்டோம்; எங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டியே தீருவோம் என்று தமிழினம் ஒரே குரலில் ஒலித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், ஒருசிலர் அரசின் அடக்கு முறைக்கும், யுத்தத்திற்கும் துணைபோகின்றார்கள். அடிமைப்பட்டு அழிந்து போகும் சமுதாயமாக நாம் மாறமாட்டோம் என்பதை உறுதியுடன் உலகத்திற்கு தெரிவிக்கும் வகையில் இத்தேர்தல் முடிவுகள் அமையவேண்டும்."

சித்தன்கேணி சந்திக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற தமிழ்க் கட்சி கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ச.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொட்டும் மழையின் மத்தியிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

மாவை சேனாதிராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

தந்தை செல்வாவின் பாசறை

**தேர்தல் களம்**

யிலிருந்து வந்த இளைஞர்கள் 1972 இற்கு பின்னர் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத்தள்ளப்பட்டனர். அகிம்சை வழியில் நின்று தந்தை செல்வா நடத்திய போராட்டம் இன்று பேரினவாதத்திற்கு - இராணுவத்திற்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தும் ஆயுதப் போராட்டமாக நடைபெற்று வருகின்றது.

இவ்வேளையில் அரசின் அடக்குமுறைகளுக்கு முண்டு கொடுக்கும் விதத்தில் டக்ளஸ் தேவானந்தா, கதிர்காமர் போன்றவர்கள் செயற்பட்டு வருகின்றனர். 38 லட்சம் ரூபாவை மாதாந்தம் பெற்றுக்கொண்டு காசைக் காட்டி இனத்தை விற்று அரசியற் பிழைப்பு நடத்தும் ஈ.பி.டி.பி. கட்சியினரை இத்தேர்தலில் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரித்து நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பது திண்ணம்.

தந்தை செல்வா விட்டுச்சென்ற சொத்தான தமிழீழத்தை அடைவதற்கு போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு உறுதுணையாகச் செயற்படும் சக்தியாக எமது கூட்டமைப்பு விளங்கும் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்" - என்றார்.



தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அ.விநாயகமூர்த்தி உரையாற்றுகையில்:-

நாம் இன்று வடமாகாணத்தின் மூலை முடக்குகளில் எல்லாம் சென்று மக்களை நேரில் சந்தித்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இன்று தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் களத்தில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் தன்னலமற்ற போராட்டத்திற்கு அகிம்சை வழியில் நின்று ஆதரவுக் குரல் கொடுக்கும் சக்தியாகவும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவும் செயற்படுவதற்காகவே இத்தேர்தலில் ஓரணியில் நின்று போட்டியிடுகின்றோம். சிலர் கூறுவது போல நாம் நாடாளுமன்றக் கதிரைகளுக்கு ஆசைப்பட்டு இத்தேர்தலில் நிற்கவில்லை.

'நீங்கள் நாடாளுமன்றத்தில் இருப்பது போராட்டத்திற்கு இடைஞ்சல்' என்று விடுதலைப் புலிகள் அறிவிப்பார்களானால் நாம் நாடாளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறிந்துவிடுவோம்" என்றார்.

**சங்கரி உரை**

த.வி.கூட்டணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் வ.ஆனந்தசங்கரி உரையாற்றுகையில் கூறியதாவது:-

அரசின் சதித்திட்டத்தை முறியடிக்கவும் தமிழினத்தின் ஒற்றுமையை உலகறியச் செய்யவும் எமது கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அதிகப்படியான வாக்குகளினால் வெற்றிபெற வேண்டியது அவசியமானது. நாடாளுமன்றத்தில் தமிழினத்தின் உரிமைகளுக்காகவும் தமிழ் மக்களுக்கு அரசும் இராணுவமும் இழைத்து வரும் கொடுமைகளுக்காகவும் எமது பதவிக்காலத்தில் அங்கு குரல் கொடுத்து வந்துள்ளோம் என்பதை அனைவரும் அறிவார்கள்.

தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவலங்களை நீக்குவதாகக் கூறிக்கொண்டு சிலர் மேலும் மேலும் இராணுவ அடக்குமுறைகள் நடைபெறுவதற்கு துணைபோய்க்கொண்டிருக்கின்றனர். சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டும் ஒரு சந்தர்ப்பமாக இத்தேர்தலை தமிழ்மக்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் - என்றார்.

தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) உபதலைவரும், வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம உரையாற்றுகையில்-

இத்தேர்தலில் நான்கு கட்சிகள் இணைந்து ஒரு கூட்டமைப்பில் போட்டியிட முன்வந்திருப்பது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை உருவாகியுள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையின் சின்னமான இக்கூட்டமைப்புக்கு கிழக்கிலும் மக்கள் மத்தியில் அமோக ஆதரவு ஏற்பட்டுள்ளதை அண்மையில் நான் அங்கு சென்றபோது நேரடியாக அறிந்து கொள்ள முடிந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் எமது கூட்டமைப்பு இத்தேர்தலில் அமோக வெற்றியீட்டி பேரினவாதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரானதோர் அமைப்பாகச் செயற்படும் நிலை உருவாகப்போகின்றது.

பேரினவாத அரசியல் கட்சிகளுக்குத் துணைபோகும் டக்ளஸ் தேவானந்தா, மகேஸ்வரன் போன்றவர்களுக்கு மக்கள் இத்தேர்தலில் நல்லபாடம் படிப்பிப்பார்கள் என்பது திண்ணம். 1983இல் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறி இனக்கலவரத்தை அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டு அகதிகளாக்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பேரினவாதத்தை தமிழ் மக்கள் இலகுவில் மறந்துவிடமுடியாது. மகேஸ்வரன் கூறுவது போல ஐக்கிய தேசியக் கட்சியினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்- என்றார்.

வேட்பாளர்கள் எஸ்.அரவிந்தன், கா.சந்திரராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

(க-135)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் யோகாசன வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. பாடசாலை விடுமுறையை ஒட்டி மாணவ, மாணவியர் இந்த யோகாசனப் பயிற்சியில் இணைந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## உதயவாக்கு

வழங்கிய நன்மைகளை நினைவு கூரக்கூடாது; பெற்ற தயவை மறந்துவிடக்கூடாது.

## நாளை

கார்த்திகை 16
சனிக்கிழமை
திதி : பிரதமை
பின்னிரவு 2.40 வரை.
நட்சத்திரம் : ரோகிணி
மாலை 6.52 வரை.
விஷ்ணுவாலய தீபம்
விநாயகர் விரதம் ஆரம்பம்
சுபநேரம் : 3.14 - 4.44
ராகுகாலம் : 9.14 - 10.44
(பழைய நேரப்படி)

ஓம் கணபதயே நம



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில்
2001ம் ஆண்டு 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களால்

## அதிபர், ஆசிரியர் கௌரவிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுந்தரலிங்கம் டினேஸ்சாந் | 177 | சோமசுந்தரம் ஜீவிதன் | 143 | பாலசூரியன் திவ்வியா | 131 |
| பாலகந்தன் பானுஜன் | 168 | ஜெகதீஸ்வரன் ருபினி | 143 | முருகையா மதிவதனி | 130 |
| நரேந்திரன் திருத்தணிகன் | 166 | யோகநாதன் சியாந்தினி | 142 | யோகேஸ்வரன் தேவகரி | 130 |
| முருகானந்தசர்மா நவநீதசர்மா | 164 | ஜெயச்சந்திரன் சாரங்கா | 142 | பரமசிவம் அபிலாஜினி | 128 |
| சிவதாஸ் சாரங்கி | 162 | பரஞ்சோதிநாதர் தாமரா | 141 | கிருஸ்ணமூர்த்தி சிவரேகா | 128 |
| மகாலிங்கம் அழகரசன் | 161 | முரளிதரன் தர்சனா | 141 | சிவராசா வினோஜா | 127 |
| வரப்பிரசாதம் அனுசன் | 159 | சத்தியசீலன் கஜலக்சனா | 141 | கதிரமலைநாதன் செந்தூரன் | 127 |
| முருகையா பானுகோபன் | 159 | ரவிக்குமார் துஷ்யந்தி | 140 | சந்திரலிங்கம் ரகுநந்தன் | 126 |
| சத்தியசீலன் கோபிகாந்தன் | 158 | கனகரத்தினம் டினோஜன் | 139 | கங்காதரன் றொசாந் | 126 |
| நிமலன் ஜனலக்ஷன் | 156 | செல்வரத்தினம் ஜனகன் | 139 | சிவப்பிரகாசம் விஷ்ணுகா | 126 |
| ஜெகதாஸ் துவாரகா | 156 | சரவணநாதன் சோதிராஜ் | 138 | வேதாரணியம் கோவர்த்தனன் | 125 |
| நகுலேஸ்வரன் முகுந்தன் | 155 | வரதராஜன் தயாதீசன் | 138 | ஸ்ரீசோதீஸ்வரானந்தன் சரணியன் | 125 |
| குணரத்தினம் கம்சத்வனி | 154 | கிருஸ்ணதாசன் டயாணி | 138 | சின்னத்தம்பி திவாகரன் | 125 |
| பரம்சோதி தனுசியா | 152 | வீரையா ஆரூரன் | 137 | பவானந்தன் தர்மிலா | 125 |
| மணிவண்ணன் சுபாசினி | 148 | குகதாசலிங்கம் லஜிந்தன் | 137 | நடராஜா கேசவன் | 123 |
| வெங்கடசாமி ஜெயப்பிரசாத் | 148 | தனராஜ் ஏகவரதன் | 135 | இலட்சுமிசங்கர் சரண்யா | 122 |
| விக்கினேஸ்வரன் சுதர்சன் | 147 | சந்திரகுமார் பிரியங்கன் | 135 | இரத்தினவேள் ஸ்ரீசியாமளன் | 120 |
| கருணைலிங்கம் ருபவிநோத் | 147 | தவராசா றொசானி | 135 | இராஜேஸ்வரன் சுவேதிகா | 120 |
| ஜெயபாலசிங்கம் நிரோஜன் | 146 | நித்தியானந்தம் செந்தூரன் | 134 | குகநாதன் குணதீபன் | 120 |
| ரஞ்சனதாஸ் ஜசாந் | 145 | சந்திரகாந்தன் பிரியந்தா | 134 | பாலசூரியர் ஆகீசன் | 119 |
| லிங்கேஸ்வரன் நவநீதன் | 145 | மகாலிங்கம் செந்தூரன் | 133 | அம்பிகைநாதன் தர்சாந் | 119 |
| தங்கவேல் சிவமைந்தன் | 144 | அப்பர்மூர்த்தி கலைச்செல்வன் | 133 | சந்திரன் நவலோஜினி | 119 |
| கௌரீஸ்வரன் ரமானுஜன் | 144 | சிவபாலன் காயத்திரி | 133 | ஜெயதீஸ்வரன் நவஜீவன் | 119 |
| | | கணபதிப்பிள்ளை சோபனா | 133 | | |

மேற்படி மாணவர்களின் பெற்றோர்கள் ஆகிய நாம் தரம் 1 முதல் தரம் 5 வரை கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் அவர்களுக்கு உறுதுணையாக நின்ற அதிபர்களையும் பாராட்டி வாழ்த்தி கௌரவிப்பதுடன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக் கல்விச் சமூகத்திற்கு ஒரு கணனித் தொகுதியினை கையளிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மேலும் இனிவரும் காலங்களில் இப்பாடசாலை அதிகூடிய பெறுபேறுகளைப் பெற எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகனின் அருளை வேண்டுகின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
யாழ்ப்பாணம்.

- சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்-
30.12.2001

## மீட்டல் வகுப்பு

தென்மராட்சி,நவ.30

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றவுள்ள தென்மராட்சிப் பாடசாலை மாணவர்களுக்கான மீட்டல் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 3ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் -

இப்பாடத்திற்கு தோற்றும் மாணவர்களை உரிய ஆசிரியர்களுடன் அனுப்பிவைக்குமாறும் வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(க-117)

## நுணாவில் ஆலயத்தில் எஞ்சியிருந்த பொருள்களும் திருட்டு

தென்மராட்சி,நவ.30

நுணாவில் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எஞ்சியிருந்த பொருள்களும் திருட்டுப்போயுள்ளன.

ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த தேர்வடக் கயிறு, சுவாமி தூக்கும் வாகனக் கொம்பு மற்றும் மடப்பள்ளி கூரைத் தகடுகள் ஆகியவை கடந்த வாரம் திருடப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் தெரிவித்தார்.

ஏற்கனவே பெறுமதிமிக்க பொருள்கள் மற்றும் ஆலய மண்டப கூரைத் தகடுகளும் திருட்டுப்போயிருந்தன என்பது தெரிந்ததே. (க-117)

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவருக்கு !

யாழ்ப்பாணம்,நவ.30

சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் வைத்து வழங்கப்படும் என அதிபர்.வெ.கயிலேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (க-7)




உ
சிவமயம்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை - 2002

மேற்படி கோயிலுக்கு 2002அம் ஆண்டிற்கான வழிபடுநர்சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை *"பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு"* என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 2001ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31.12.2001) மாலை 5 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகச் *"செயலாளர், ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு"* என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறு அல்லது கோயில் அறங்காவலர்சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் *வழிபடுநர்சபை உறுப்புரிமை விண்ணப்பம்* எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

### வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:

1. அ. விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்
ஆ. இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்
இ. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்
ஈ. இலங்கை குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதி உடையவர். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்,
2. அ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்தியபூசை ஒன்றின் உபயகாரராக இருப்பவராயின் அல்லது -
ஆ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மஹோற்சவ திருவிழாக்கள் உட்பட்ட எந்த ஒரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள், மஹோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ, வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2(அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ வகுப்பினரோ தத்தமகருள் வயதுவந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/=) செலுத்தலாம். அத்தகைமையற்றவர்கள் மேற்படி உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) வின்படி
இ. தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/=) *பொருளாளர் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு* என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.
அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும் இக்கோயிலில் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும், இக்கோயிலில் இலாபகரமாக எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு:* விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப் படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ரூபா 5 செலுத்தி உரிய விண்ணப்பப் படிவத்தை கோயில் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னையின் சேவையில்
கனக. உருத்திரகுமாரன் B.A.DIP. IN ED.
கௌரவ செயலாளர், அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(95364)



We Serve

பிமல் ஆயுள் வேத தயாரிப்புக்களின்
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான
சிவா நறுமணப் பூங்கா ஆதரவில்
சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306 B
பிராந்தியம் 10 சார்ந்த
சுன்னாகம் - கோப்பாய் - மானிப்பாய் கோவிற்பற்று -
நல்லூர் - வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள் இணைந்து
மாவட்ட சுகாதார தினத்தை முன்னிட்டு நடத்தும்

## சித்த மருத்துவ கருத்தரங்கு

*விடயம் :- தொய்வு நோய்க்கான (அஸ்த்துமா) சித்த மருத்துவ முறைகள்*
**திகதி: நாளை (01-12-2001) சனிக்கிழமை பி.ப. 3.00 மணி**
**இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி**

*தலைமை*
லயன் செ.ஞானராஜா
*(பிராந்திய தலைவர் - பிராந்தியம் 10)*
*பிரதம விருந்தினர்*
லயன் சீமாட்டி வைத்திய கலாநிதி மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன்
*(தலைவர் சித்தமருத்துவப் பிரிவு - யாழ்.பல்கலைக்கழகம்)*
*கௌரவ விருந்தினர்கள்*
லயன் வைத்திய கலாநிதி S.S.அருளானந்தம்
*(மாவட்டத் தலைவர், சுகாதாரம்)*
லயன் வைத்திய கலாநிதி V.தியாகராஜா
*(மாவட்டத் தலைவர் - குழந்தைகள் பராமரிப்பு)*
*சிறப்பு விருந்தினர்*
திரு.கு.குருநாதசிவம்
*(உரிமையாளர் - சிவா நறுமணப் பூங்கா)*
கருத்துரை வழங்கும் மருத்துவர் குழு
லயன் வைத்திய கலாநிதி பூரண பசுபதிப்பிள்ளை உரோ மகேஸ்வரன்
*(முன்னாள் வடகிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர்)*
லயன் வைத்திய கலாநிதி பொன்.இராமநாதன்
*(விரிவுரையாளர் சித்தமருத்துவ பிரிவு - யாழ்.பல்கலைக்கழகம்)*
செல்வி சசிவதனி சச்சிதானந்தன்
*(உள்ளக பயிற்சி வைத்தியர் - சித்த ஆயுள்வேத போதனாசாலை - கைதடி)*
செல்வி மேகலை சிவசுப்பிரமணியம்
*(உள்ளக பயிற்சி வைத்தியர் - சித்த ஆயுள்வேத போதனாசாலை - கைதடி)*

கருத்தரங்கினைத் தொடர்ந்து சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு
மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கும்
'எயிட்ஸ் என்னும் உயிர்கொல்லி'
என்கின்ற வில்லிசைப்பாட்டு நிகழ்ச்சி இடம்பெறும்.
இந்நிகழ்வில் கலந்து பயன்பெறும்படி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*யாழ்நகரில் முன்னணி ஆயுள்வேத சித்த மருந்து விற்பனையாளர்களான சிவா நறுமணப் பூங்கா ஸ்தாபனத்தாரின் அஸ்த்துமா நோய்க்குரிய மருந்துகள் கருத்தரங்கில் பார்வைக்கு வைக்கப்படும்.*

(95362)

# உற்சாகமாக வாக்களிக்க உரிய தருணம் இது!

யாழ்.மாவட்ட மக்கள் அனைவரும் தேர்தல் வாக்களிப்பில் தவறாது உற்சாகமாகப் பங்குபற்ற வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

### தார்மீகக் கடமை

கடந்த இரு பொதுத் தேர்தல்களில் பெருந்தொகையான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விலகி இருந்தனர். இதனால் அவர்களது அரசியல் எண்ணங்கள், நிலைப்பாடுகள், கருத்துக்கள் பேரினவாதிகளுக்கும் உலகிற்கும் எட்டமுடியாத நிலை உருவானது. இது தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு நிகழ்வாகும். இந்த நிலைமையை முற்றுமுழுதாக மாற்றியமைத்துத் தமது இலட்சியங்கள் இவை தாம் என இலங்கை




உட்பட முழு உலகிற்கும் எடுத்தியம்ப இத் தேர்தல் நல்லதோர் அருமையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே எந்த ஒரு வாக்காளரும் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருக்கக்கூடாது. குறிப்பிட்ட ஒரு தொகையினரான வாக்காளர்கள் வாக களிப்பில் கலந்துகொள்ளாதுவிடுமிடத்து அவர்கள் மீது அவர்களே விரும்பாத ஒரு பிரதிநிதித்துவம் திணிக்கப்பட ஏதுவாகும். அதன் பின்னர் அந்தப் பிரதிநிதித்துவத்தை தேர்தலில் கலந்துகொள்ளாதவர்கள் தமது பிரதி நிதித்துவம் அல்ல என்று வாதிடமுடியாது. எனவே ஜனநாயக மரபுகளைப்பேணி அனைவரும் வாக்களிப்பிலே கலநதுகொள்வது எமது நாட்டினது அரசியற் சூழ்நிலைகளை எடுத்துப் பார்க்கையில் அவசியத்திலும் அவசியமாயிருக்கின்றது. இது அவர் தம் தார்மீகக் கடமையுமாகும்.

### நன்றும் தீதும் பிறர்தரவரா

நமது நலன்களுக்கு உகந்ததான சிறப்பான பாதையிற் செல்வது தமிழ் இனத்தின் பொறுப்பேயன்றி வேறு எந்த இனத்தவரதும் பொறுப்பு ஆகாது. தம் இனத்தின் விடிவுக்கான நல்லர சாட்சியை உருவாக்குபவர்களும் தமது பிரதிநிதித்துவங்களின் மூலம் உரிமைகளுக்காகப் போராடுபவர்களும் அவர்களேயாவர். வாக்களிப்பில் கலந்துகொள்ளாதவர்களுக்கு தமது பிரதிநிதித்துவங்களின் துரோகத்தனமான செயற்பாடுகளைத தட்டிக்கேட்கும் மனோபலம், ஆத்மவலு அற்றுப்போய்விடும் என்பதே உண்மை.

• அரசியல்வாதிகளால் அரசாங்கங்கள் எவையும் உருவாக்கப்படுவது இல்லை. ஜனநாயக மரபுகளின் படி பொதுமக்களே அரசாங்கங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அரசாங்கங்களில் அங்கம்வகிக்கப் பொது மக்களின் பிரதிநிதிகளாகவே அரசியல்வாதிகள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். பொதுமக்களே தமக்குத் தாம் எசமானர்கள் ஒழிய அரசியல்வாதிகள் அல்லர். பொதுமக்கள் தமது நல்வாழ்வைத் தாமே நிர்ணயித்துக் கொள்வதற்காகவே பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. 'நன்றோ தீதோ பிறர் தர வருபவை அல்ல' என்பது பழந்தமிழர்வாக்கு. இந்த வாக்குப்படி யாழ்ப்பாண மாவட்ட மக்கள் தமக்கு நல்லனவற்றைத் தேடிக்கொள்வதற்குத் தேர்தல்களைப் பயன்படுத்தவேண்டியதே அவர்தம் சிந்தனையும் செயற்பாடாகவும் இருக்க வேண்டும்.

### தேர்தல் வரலாற்றில்...

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரேநாளில் நாடு முழுவதும் பொதுத்தேர்தலை நடத்த உத்தரவிட்ட பெருமைக்குரியவர் மறைந்த பிரதமர் டபிள்யூ தகநாயக்க அவர்கள் ஆவார். 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத்தேர்தலே முதன்முதலில் ஒரேநாளில் நடத்தப்பட்ட தேர்தல் ஆகும். 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை அடுத்துப் பிரதமர் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் அமைச்சர் அவையில் கல்வி மந்திரியாகப் பதவி வகித்த தாக அவர்கள் 1959ஆம் ஆண்டு பிரதமர் பண்டா அவர்களது அரசியற்படுகொலையைத் தொடர்ந்து பிரதமராகப் பதவிக்கு வந்தவர். நல்லாசிரியராக வாழ்வை ஆரம்பித்த அவர், ஆரம்ப காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியில் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசித்தவர். காலித் தேர்தல் தொகுதியை மிக நீண்டகாலம் பிரதிநிதித்துவம் செய்தவர். இலங்கையில் சுதந்திர ஆரம்ப காலத்தில் ஒரு சமயம் இவரை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மிகமிகச் செல்வாக்குடையவரான பணக்காரப் பிரமுகர் ஒருவர் போட்டியிட்டார். எச்.டபிள்யூ.அமரசூரியாவே அவர் என்பது என்து ஞாபகம். பணம் பண்டங்கள் எல்லாம் காலித் தொகுதியில் வாரி இறைக்கப்பட்டன. அவ்வேளையில் காலித்தொகுதி வாக்காளர்களுக்குத் தகா அவர்கள் விடுத்த வேண்டுகோள் மிகவும் சுவையானது; அர்த்தபுஷ்டியுள்ளது. "நான் ஒரு பண மரத்தை உலுப்புகிறேன். மக்கள் எனக்கே வாக்களிக்க வேண்டும்" என அவர் வேண்டுகோள் விடுத்தது அன்று மாணவனாக இருந்த எனக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றது. அவ்வாறே மக்களும் வாக்களித்து அவருக்கே வெற்றிவாகை சூட்டினர். இங்கு பணம், பண்டங்கள் எவையும் எடுபடவில்லை.

### மக்கள் மனதில் வன்னியசிங்கம்

இவ்விடத்தில் 1952ஆம் ஆண்டும் பொதுத் தேர்தல் ஞாபகங்கள் என்க்கு வருகின்றன. தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அது முதன் முதலாகத் தேர்தலில் போட்டியிட்ட சமயம் அன்றைய கோப்பாய்த் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் கு.வன்னியசிங்கம் போட்டியிட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுள் ஒருவர் புறொக்ரர் சி.அருளம்பலம் அவர்கள். 'சிமோல்' என்று மக்களிடையே பிரபல்யமானவர். செல்வாக்கும் படைத்தவர். வன்னியசிங்கம் ஓர் இலட்சியவாதி மட்டுமே. பணபலம் அற்றவர். இவருக்கு அன்று மொழி, இன, நாட்டுப்பற்றாளர்களே பக்கபலமாக இருந்தனர். எழுச்சி கொண்ட மாணவர் படையணிகள் இவரை ஆதரித்தனர். சிமோலின் பக்கம் செல்வாக்கான - பலதரப்பட்ட பிரமுகர்கள் பணம், படை பலத்துடன் அணிவகுத்து நின்றனர். 1948ஆம் ஆண்டு பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவினது அரசாங்கத்தினால மலையகத் தமிழர்களது வாக்குரிமை, குடியுரிமை, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்கள் இலங்கையில் அநாதைகள், கள்ளத்தோணிகள் ஆக்கப்பட்டபோது அந்த அநீதியை, கொடுமையை எதிர்த்துப் பிரதிநிதிகள் சபையில் வாக்களித்த காரணத்தால் வன்னியசிங்கம் அவர்கள் மக்களது மனதில் எவ்வளவு தூரம் இடம்பிடித்து உயர்ந்து நின்றார் என்பதைத் தேர்தல் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

அந்தக் காலத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் கட்சிக்காரர்களால் வாகனங்கள் மூலம் அழைத்து வரப்படுவது வழக்கம். வாக்குச் சாவடிகளுக்கு அண்மையில் அபேட்சகர்களது அலுவலகங்களும், அவரவர் கட்சிக் கொடிகள், சின்னங்கள் வர்ணங்களால் கலியாணப் பந்தல்கள் போன்று அலங்கரிக்கப்பட்டிருக்கும். வாக்காளர்கள் முதலில் அபேட்சகர்களின் அலுவலகங்களில் குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள் கொடுத்து உபசரிக்கப் படுவர். தொடர்ந்து வாக்காளர் இடாப பிலுள்ள தமது இலக்கத்தைப் பெற்றுக்கொண்டபின் வாக்களிக்கச் செல்வர். வாக்களிப்பு நாளன்று சிமோல் அருளம்பலத்தாரின் தேர்தல் அலுவலகங்கள் எல்லாம் வாக்காளர்களால் நிரம்பிவழிந்தன. பல வாக்குச் சாவடிகளுக்கு அண்மையில் வன்னியசிங்கத்தாருக்கான அலுவலகங்களே அமைக்க இடமளிக்கப்படவில்லை. வாக்களிப்பு மிகச் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பகல் இரண்டு மணியளவில் சிமோல் அவர்களின் அலுவலகங்களின் ஊடாக வாக்களிக்கச் சென்றவர்களின் தொகையைத் தொகுதி முழுவதும் கணக்கிட்டபோது அவர் ஆகக் குறைந்தது ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வன்னியரைத் தோற்கடிப்பார் எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் வாக்குகள் எண்ணப்பட்டபோது 210 மேலதிக வாக்குகளால் கோப்பாய்க் கோமான் வெற்றிபெற்றார் என்பது வரலாற்று நிகழ்வு. இங்கும் இலட்சியமே வென்றது. எப்படி? அதுதான் அந்த இரகசியம்.

### பனங்கொட்டை

இன்றைய தேர்தலில் சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் கூட யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. யாழ்ப்பாண மக்கள் தேர்தலைப் புறக்கணித்தால் ஏதோ ஐம்பது நூறு வாக்குகள் கிடைத்தால் போதும், தமக்கும் ஒரு பிரதிநிதித்துவம் கிடைக்கலாம் என்ற நப்பாசை போலும். அவற்றிற்கு 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை யாழ். மாவட்ட மக்கள் முற்று முழுதாகப் புறக்கணித்ததன் பிரதிபலிப்பென்றும் இதனைக் கருதஇடமுண்டு. பல

(10ஆம் பக்கம் பார்க்க)

# 14ஆவது ஆண்டு

# நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

மலர்வு 13 ☆ 11 ☆ 1936



உதிர்வு 04 ☆ 12 ☆ 1987

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர், அருள்முருகன் நகைஅகம்)

திதி: 30-11-2001

*அன்புக்கோர் இலக்கணமாய் பண்புக்கோர் பொக்கிஷமாய்*
*வாழ்ந்த எம் குல விளக்கே!*
*ஆதரவு தந்து எமை ஆளாக்கி வைத்துவிட்டீர்!*
*பதினான்கு வருடங்கள் பாரினிலே மறைந்ததுவோ?*
*அழியாது எம்பாசம்; அகலாது உம்.நினைவு; ஆறாது எம் சோகம்!*
*எம் இதயக் கோயிலிலே வைத்து உங்களை நாங்கள்*
*நித்தமும் பூஜிக்கின்றோம்!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*பெருங்குளம், சாவகச்சேரி*

*483, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*


**சாரங்கா நகைமாடம்**
*177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (C/19516)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ். மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

# ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



**மாவீரர் தின உரையின்**
**மகத்துவம் பேணவும்**
**தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம்**
**பயங்கரவாத போராட்டமல்ல**
**அரச பயங்கரவாதத்திற்கெதிராக**
**நடத்தப்படும் விடுதலைப் போராட்டம்**
**என உலகிற்கு உணர்த்திடவும்**
**தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக**
**விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியில் ஏற்கவும்**
**உழைத்திட ஞா.ஆனந்தகுமாரை**
**பெரும்பான்மைப் பலத்துடன் நாடாளுமன்றம்**
**அனுப்பி வைப்போம்.**

ஞா.ஆனந்தகுமார்
நவம்பர் 28, 2001

பொற்பதி வீதி,
கொக்குவில்.

மேன்மைதகு சட்டமா அதிபர்,
சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு - 12.

மேன்மைதகு ஐயா,

கீழே கையெழுத்திட்டுள்ள ஞா.ஆனந்தகுமாராகிய நான் 2001 டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடுகின்றேன்.

இலங்கையில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் இளைஞர்களும் முஸ்லிம், மலையக இளைஞர்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் எவ்வித ஆதாரமும் இன்றி கைது செய்யப்பட்டு, நீதி விசாரணையின்றி பல வருடங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சோமவன்ச அமரசிங்க ஜே.வி.பியின் பயங்கரவாத தலைவரென்பது யாவரும் அறிந்ததே. 1988, 89 காலகட்டத்தில் நடைபெற்ற அநேகமான கொலைகளுக்கு இவர் கடந்த அரசாங்கத்தினால் தேடப்பட்டவரென ஊடகங்கள் மூலமாக அறிய முடிகிறது.

அமரசிங்க குடியகல்வு முறைகளை மீறி நாட்டை விட்டுச் சென்று, மீளவும் நாட்டிற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக இலங்கை கடவுச்சீட்டுடன் வந்துள்ளார். இவருக்கு ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்களில் 50 பேர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது.

சட்டத்தின் முன் மறைந்திருக்க வேண்டிய அமரசிங்க, அரசாங்கமளித்த சலுகைகள் நிமித்தம் நாடு திரும்பியுள்ளார்.

மதிப்புக்குரிய ஐயா! வடக்கு - கிழக்கு தமிழ், மலையக, முஸ்லிம் இளைஞர்கள் எவ்வித தகுந்த ஆதாரங்களுமின்றி, நீதி விசாரணையின்றி கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விரக்தியடைந்த நிலையில் உள்ளனர். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் கைது செய்ய போதிய ஆதாரங்கள் இருந்தும் அமரசிங்க கைது செய்யப்படாமல் அரச சலுகைகளின் காரணமாக நாடு திரும்பியுள்ளார்.

சட்டமா அதிபரான தாங்கள், நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவராவார். இலங்கை பிரசைகளான சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பயங்கரவாத சட்டம் ஒவ்வொரு விதத்தில் செயல் படுத்தப்படுகின்றது. பயங்கரவாத சட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதையும் உணர்கின்றேன்.

நாட்டின் சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலராகிய தங்களிடம் இளைஞர் சமூகத்தின் சார்பில் மீள் பரிசோதனை செய்து அவர்களை விடுவிக்குமாறு தாழ்மையுடனும், தயவுடனும் வேண்டுகின்றேன்.

அனைத்து பிரசைகளும் சட்டத்தின் முன் சமம் என்பது தெளிவாகின்றது. இவ் மனுத் தொடர்பாக விரைவான முடிவெடுக்குமாறு வேண்டுகின்றேன்.

உண்மையுள்ள
G.ஆனந்தகுமார்

பிரதி :- பொலிஸ் மா அதிபர்
பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு - 01

---

G.Anandakumar
November 28, 2001

Potpathy Road,
Kokuvil.

Honourable Attorney General,
Attorney General's Department,
Colombo - 12

Honourable Sir,

I the undersigned G.Anandakumar am a candidate representing the Sri Lanka Muslim Congress contesting in the Jaffna District, at the Parliamentary Elections to be held on 5th December 2001.

On behalf of the Sri Lanka Tamil Community from the North & East, upcountry Tamil Community and the Musilm Community, I wish to bring to your urgent attention that there are many Tamil speaking youth from the aforesaid communities arrested and held in custody for several years, under the prevention of Terrorism Act (PTA), without any material evidence to file plaint.

Mr.Somawanse Amarasinghe a well known terrorist leader of the J.V.P. who was wanted by the previous Government as being responsible for a spate of murders both in 1988 - 1989 period, entered Sri Lanka, which you are aware, as widely reported in the electronic and print media.

Mr.Amarasinghe having left the country without complying with proper immigration exit procedures, has re-entered the country through the Bandaranayaike International Airport with a Sri Lankan Passport and according to the electonic and print media the Presidential Security Division provided a (50) fifty man security team for his personal protection.

Due to the newfound favor with the Government in power the J.V.P. was able to obtain State patronage for Mr.Amarasinghe's visit, although he remains a fugitive from the Law.


Hon. Sir, Tamil speaking youth from the Sri Lanka Tamil, Upcountry Tamil and Muslim Communities are languishing in jails without material evidence to file plaint against them, since they were arrested under the provisions of the prevention of Terrorist Act. Mr.Amarasinghe against whom exists enough evidence, strangely visits Sri Lanka under State Patronage.

Traditionally as Attorney General you safeguard the Law and order of the country. Citizens of our Motherland are concerned that this Sinhale terrorist has one law, whilst Tamil speaking youth in custody, without any material evidence to file plaint and interned under P.T.A. has exposed the existence of another Law denying impartiality. On behalf of these youth I humbly request that as the Guardian of Law and Order in this country their plight be kindly reviewed and they be released.

With the understanding that each citizen of the Country is equal before the Law, I submit this appeal for your urgent consideration.

Yours respectfully,
Sgd.
G.Ananndakumar.

C.C. : Inspector General of Police,
Police Headquarters,
Colombo - 01.




(C/19528)




# நம் நாட்டின் அனைத்து வாக்காளர்களுக்கும்

செப்டம்பர் 19ல் சமாதானத்திற்கு ஆதரவு நல்கி
நம்மில் பல இலட்சக் கணக்கானோர் ஒன்று திரண்டு
ஒருவரோடொருவர் கைகோர்த்து
அமைதி நாடும் நம் வேட்கையை வெளியிட்டோம்.

இப்போது மீண்டும் ஒரு முறை, சக்தி நம் கரங்களை
வந்தடைந்துள்ளது. சமாதானத்தை முன்னிறுத்திச்
செயற்படும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யும்
பூரண சுதந்திரம் நமக்குண்டு.

அமைதி ஒன்றே நம்மையும் நம் நாட்டையும் எதிர்காலத்தில்
வளம் பெறச் செய்யும். நம் எதிர்காலம் இப்போது நம்
கைகளிலேயே உள்ளது. டிசம்பர் 5ல் நீங்கள்
வாக்களிப்பதை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் சமாதானத்திற்கென
வாக்களியுங்கள். ஏனெனில் உங்கள் வாழ்வும், அதனிலும்
மேலாக உங்கள் குழந்தைகளின் வாழ்வும் எதிர்காலத்தில்
நலம் பெற நாடு காணும் அமைதியே நல்வழி.

ஸ்ரீ லங்கா First

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

இணையத் தளம் : www.srilankafirst.com

(G/4953)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

## வலுவிழந்தோர் தினம் ~ 2001

மேற்படி தினத்தையொட்டி, எமது சங்கத்தில்
எதிர்வரும் (03-12-2001) திங்கட்கிழமை
காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை
ஒன்று கூடல் நடைபெறும்.
எமது சங்கத்துடன் தொடர்புடைய அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் வரவை எதிர்பார்க்கும்*
செயற்குழு உறுப்பினர்கள்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்.

(C/19523)


## நெஞ்சமகலா நினைவுகளின் ஓராண்டு நிறைவுடனே........!

உதயம் 14 ☆ 05 ☆ 1935



அஸ்தமனம் 11 ☆ 12 ☆ 2000

### அமரர் பொன்னுத்துரை தவச்செல்வம்

திதி:30-11-2001

அன்பு அப்பா!

"நல்லவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை;
மாண்டவர்கள் சிலரை மறப்பதற்கு முடிவதில்லை"
நீங்கள் இருந்த பொழுது எம்மிடம் இல்லாதது என்று எதுவுமே
யில்லை - அப்பா
இப்பொழுது நீங்கள் இல்லாத பொழுது எம்மிடம் இருப்பது என்று
எதுவுமேயில்லை!

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல பொன்னாலை
ஸ்ரீ வரதராஜப் பெருமாளை இறைஞ்சுகின்றோம்.

*(Lanka tours)*
*தொல்புரம் - மேற்கு,*
*சுழிபுரம்.* (94975)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமகன், தாய்,
சகோதரர்கள், மைத்துனன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 27 - 05 - 1934



உதிர்வு 31 - 10 - 2001

### திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி

*(வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் கோயில் முன்னாள் முகாமையாளரும், வண்ணைத் தில்லைக்காளியம்பாள் தேவஸ்தான முன்னாள் உரிமையாளருமான அமரர் நல்லதம்பி இராசரத்தினத்தின் அன்பு மனைவியார்)*

பெற்றெடுத்த நாள் முதலாய் பிரியமுடன்
எமை வளர்த்து, எல்லோருடனும்
இன்முகத்துடன் பழகி, எல்லோரையும்
கதறி அழ வைத்துவிட்டு எங்கு
சென்றீர்கள்? அம்மா!
கன்றிழந்த பசுபோல் கதறியழுகின்றோம்
அம்மா! மீண்டும் ஒருமுறை வருவீர்களா?
துன்பத்தை எம்மேல் சுமத்திவிட்டு
பறந்தீயளோ, மண்ணுலகைவிட்டு
அடைந்தீயளோ, விண்ணுலகை நம்பி!

அன்னாரின் அந்தியேட்டி மற்றும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.11.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.50, நாவலடி லேன்,*
*வண்.வட.மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (95028)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## 'அகவொளி' கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.30

அகவொளி குடும்பவளத்துணை நிலையம் நடத்தும் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'அகவொளி' நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "குடும்பத்தில் போரில் சமூக பண்பாட்டுத் தாக்கங்கள்" என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளர் ஏ.ஈ.ரிச்சர்ட் கருத்துரை வழங்குவார்.

(க-4)

## பரிசளிப்பு விழாவும் கலை விழாவும

யாழ்ப்பாணம்,நவ.30

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.புஷ்பலிங்கமும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர் ச.யோகராசாவும் கலந்துகொள்வர்.

(க-6)

## விபத்தில் பொலீஸார் உட்பட 4பேர் காயம்

தென்மராட்சி,நவ.30

கரணவாய் மூத்தவிநாயகர் கோயடியில் இடம்பெற்ற பொலீஸாரின் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு பொதுமக்களும் படுகாயமடைந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

(ம-117)

## உற்சாகமாக.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபேட்சகர்களுக்கு இப்படியானதோர் ஆசை.

### யாழ்ப்பாணப் பகிஷ்கரிப்பு

டொனமூர் அரசியல் திட்டத்தை எதிர்த்து 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசாங்க சபைத் தேர்தலை யாழ்ப்பாணம் முற்றுமுழுதாகப் பகிஷ்கரிப்புச் செய்தது. யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளுக்கு ஒரு குருவி கூட நியமனப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை. 'யாழ்ப்பாணப் பகிஷ்கரிப்பு' எனப் பிரசித்திபெற்ற இப்பகிஷ்கரிப்பின் பின்னர் இத்தொகுதிகளுக்கான தேர்தல்கள் 1934ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, அத்தேர்தல்களின் மூலம் வெற்றிவாகை சூடிய ஜீ.ஜீ. பொன்னம்பலம், அருணாசலம், மகாதேவா போன்றோர் சிம்ம நடையில் அரசாங்க சபைக்குள் காலடி எடுத்து வைத்தனர் என்பது சரித்திரம்.

"போடுபோடு பச்சைப் பெட்டி போனமுறை வென்ற பெட்டி இம்முறையும் வெல்லும் பெட்டி தேவா தேவா மகா தேவா" என்றவாறு அரசாங்கசபைக் காலத்தில் தேர்தல் முழக்கங்கள், கோஷங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அபேட்சகர்களுக்கும் வெவ்வேறான நிறப் பெட்டிகளே வாக்குகள் போட ஒதுக்கப்பட்ட காலம் அது. இன்றைய படிப்பறிவு இருந்திராத அந்தக் காலத்தில் இந்நாள் வாக்குச்சீட்டு முறைகள் பயன்படாத கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேயே எவ்வாறு மிகுந்த அரசியல் விழிப்புணர்வை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் பெற்றிருந்தார்கள் என்பதற்கு இலங்கைச் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ள அன்றைய 'யாழ்ப்பாணப் பகிஷ்கரிப்பு' நல்லதோர் உதாரணமாகும். யாழ்ப்பாண வாக்காளர்கள் முட்டாள்கள் அல்லர். மகா புத்திசாலிகள் என்பதையே அரசாங்கசபைக் காலத்திலிருந்து தேர்தல்கள் பல உணர்த்தி நிற்கின்றன.

தெற்கிலும் தாம் மகா புத்திசாலிகள் என்பதையே அனேக சந்தர்ப்பங்களிலும் வாக்காளர்கள் உணர்த்தியுள்ளனர். கொடிய யுத்தத்தின் சீரழிவுகள் காரணமாக விரக்தியின் விளிம்பில் உள்ளனர் இன்றைய யாழ்ப்பாண மக்களில் கணிசமான தொகையினர். அவர்களை உற்சாகப்படுத்தி வாக்களிக்கச் செய்ய வேண்டியது இளைய தலைமுறையினரின், மாணவர்களின் மகத்தான கடமை என்பதே இந்த நேரத்தில் எனது செய்தியாகும். தை பிறந்தால் வழி பிறக்குமெனவும் நம்புவோமாக; பிரார்த்திப்போமாக. ★


## ஐக்கிய தேசியக் கட்சி
## தேர்தல் - 2001

அல்லல் அறுத்து ஆனந்தமாக்க
தங்கள் பொன்னான வாக்குகளை
எமக்களியுங்கள்.



தி.மகேஸ்வரன்
இல. X
முதன்மை வேட்பாளர் (94862)




எல்.திலகநாயகம் போல்
இல. X
ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1930 - 01 - 28



மறைவு 2001 - 10 - 31

### அமரர் தம்பு ஆறுமுகம்

*[ஓய்வுபெற்ற காணி அதிகார (C.O)]*

**திதி: பௌர்ணமி 2001.11.30**

அன்போடு பண்புகொண்டு அரவணைத்து அறிவூட்டி
அருந்தவச் செல்வங்களை ஆதரித்து வளர்த்த
அணைந்த குலவிளக்கே! எம் பாச தீபமே!!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்!

இன்று (30.11.2001) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் ஆத்மசாந்திப்பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்குகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நாவலடி,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (94970)

- குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 06 - 1935



மறைவு 31 - 10 - 2001

### அமரர் நாகமணி தம்பிராசா

*(குஞ்சு)*

நெஞ்சின் அலைகளிலே அன்பை
வளர்த்துத் தந்தாய்,
வீரனாக நீவாழ்ந்து எம்மை
வாழவைத்தாய்,
பண்பாகப் பாசத்துடன் நாம்வாழ
நல்ல பணி செய்துவைத்தாய்,
பாவிகளாய் நாமிருக்கக் கண் கலங்க -
வைத்துவிட்டு காற்றோடு
- பறந்தீரோ?
கண்ணீரால் மாலை கட்டிக் கலங்குகின்றோம்
நாம் இன்று!

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
(94947)

*கென்னடி வீதி,*
*நாவாந்துறை.*

## எமது இதயபூர்வமான நன்றிகளும் பாராட்டுக்களும்

மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய முன்பள்ளி கட்டட புனரமைப்புக்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தும், அன்ன மகேஸ்வரர் ஆலய மண்டபம் கட்ட இரண்டு லட்சம் ஒதுக்கி, அதில் ஒரு லட்சம் ரூபாவை முற்பணமாகவும் வழங்கி உதவியமைக்காக,



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளராகிய
உயர்திரு. K.V. **குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும் -





இந் நிதிகளைப் பெற்று கட்டடங்கள் அமைக்க உதவியும், இப்பிரதேசத்தில் நீண்டகாலமாக திருத்தப்படாதிருந்த வீதிகளைத் திருத்தியும் உதவிய மக்கள் தொண்டன் வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.
K.**கமலசேகரன் (பாபு)**
அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

- மயிலணிவடக்கு ஜனசக்திவாழ் மக்களும்
அன்னமகேஸ்வரர் ஆலய
பரிபாலன சபையினரும்.

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.*
(95379)

## தவறிவிட்டது

P.ரவிச்சந்திரன் என்பவருடைய மக்கள் வங்கிக் காசோலை ஆறுகால்மடத்திற்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ப.ரவிச்சந்திரன்,வர்த்தக சங்கம், சாவகச்சேரி, நெல்லியடியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P. 213014
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(95377)

## SHAMROCK
**J/ ஈச்சமோட்டை வீதி**

ஆண்டு ③ முதல்
⑪வரை
**கல்வி ஆண்டு**
**2002**
***புதிய வகுப்புகள்***
*ஆரம்பம் 01-12-2001*
*சனி 8 a.m.*
(C/19536)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001ஆம் ஆண்டில் க.பொ.த.உயர்தர (A/L) பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்த

| | |
|---|---|
| செல்வன் தியாகராசா லெஸ்லி வண்ணராசா | 3A |
| செல்வன் தர்மலிங்கம் கபிலன் | 2A,B |
| செல்வன் சற்குணநாதன் கிருஸ்ணா | 2A,B |

ஆகியோர் மேன்மேலும் கல்வியில் வளர்ச்சியுற்று சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஜெயசிங்கம் குடும்பத்தினர்,
அக்கா நளாயினி,
தர்மு குடும்பத்தினர்.

*46/11, ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர்.*
(95375)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

டச்சு வீதி, மானிப்பாய் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக ரூபாய் 340,000/= (மூன்று லட்சத்து நாற்பதாயிரம்) நிதி ஒதுக்கி, அதில் முதற்கட்டமாக 170,000/= (ஒரு லட்சத்து எழுபதாயிரம்) ரூபாவை உடனடியாகத் தந்து உதவியமைக்காக,



'அபிவிருத்திச் சாதனையாளர்'
மாண்புமிகு அமைச்சர்
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும் -

மானிப்பாய்
பிரதேச சபைத் தலைவர்
**திரு.வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
**(ஜீவா)**
அவர்களுக்கும் -



எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மானிப்பாய் டச்சு வீதி
மக்கள்.
(95379)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2002ஆம் ஆண்டு

31-10-2001ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடைகள் ஆகியன குத்தகைகளுக்கு மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி:- 2001-12-13ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை.
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 2001-12-14ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை.
கேள்வி திறக்கப்படும் திகதி:- 2001-12-14ஆம் திகதி பிற்பகல் 2 மணி.

### அட்டவணை

| குத்தகையின் விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜீ.எஸ்.ரீ நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1.மானிப்பாய் பொதுச்சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/= | 1500/= | 550,000/= |
| 2.மாட்டிறச்சிக்கடை, மானிப்பாய் | 400/= | 300/= | 1500/= | 175,000/= |
| **02. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.காக்கைதீவு சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/= | 1500/= | 15,000/= |
| 2.சாவற்கட்டு சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/= | 1500/= | 75,000/= |
| 3.நவாலி பிரசாத் சந்தை, ஆட்டிறச்சிக்கடை | 300/= | 300/= | 1500/= | 15,000/= |
| 4.ஆனைக்கோட்டை சந்தி, ஆட்டிறச்சிக்கடை | - | 300/= | 1500/= | 20,000/= |
| **03.பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1.பண்டத்தரிப்பு பொதுச்சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/= | 1500/= | 150,000/= |
| 2.பண்டத்தரிப்பு சந்தை, மாட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 35,000/= |
| 3.பண்டத்தரிப்பு சந்தை, ஆட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 15,000/= |
| 4.பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக்கடை இல. 01 | 250/= | 300/= | 1500/= | 7,000/= |
| 3.பண்டத்தரிப்பு சந்தை, கருவாட்டுக்கடை இல. 02 | 250/= | 300/= | 1500/= | 7,000/= |
| **04.பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.மாகியப்பிட்டி பொதுச்சந்தை *(துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட)* | - | 300/= | 1500/= | 60,000/= |
| 2.மாகியப்பிட்டி சந்தை, மாட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 12,500/= |
| 3.மாகியப்பிட்டி சந்தை, ஆட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 8,000/= |
| 4.இளவாலை சந்தை, மாட்டிறச்சிக்கடை | - | 300/= | 1500/= | 12,000/= |
| 5.மாதகல் சந்தை, ஆட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 5,000/= |
| 6.மாதகல் சந்தை, மாட்டிறச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 12,000/= |

***குறிப்பு:-***
அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள் சேவைகள் வரியான 12.5 வீதமும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டுமென்பதையும் அறியத் தருகின்றேன்.

(வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே.பி.யு.ம்)
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம், மானிப்பாய்.
2001-11-26
(C/19548)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தரம் 6-10 மாணவர்களுக்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு அறிக்கைகள் இன்று (30-11-2001) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 - 12.00 மணிக்கு வழங்கப்படும்; இலவச பாட நூல்களும் வழங்கப்படும். தரம் 7,8 மாணவர்களின் பெற்றோர் கூட்டம் இத்தவணை நடைபெறமாட்டாது.

- அதிபர்.
(C/19546)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



தோற்றம்
18.12.1985

மறைவு
23.06.2001

**செல்வன் செல்வராஜா கார்த்திக்**

அமரரின் நினைவாக இன்று (30.11.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
பா.செல்வராஜா
*(அச்சுவேலி மினிபஸ் நோக்கனிப்பாளர்)*
*7/1, அன்னசத்திர லேன், கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
(95367)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் ஏரம்பு பேரம்பலம்**

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றது. அன்னாரின் திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தவர்களுடன் ஆசிரியர் சங்கமும் இணைந்துகொள்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,
ஆசிரியர் சங்கம்.
(95365)

# PARLIAMENTARY GENERAL ELECTION - 2001
# AN APPEAL TO THE AMBASSADOR OF U.S. EMBASSY IN SRI LANKA


## By Mr.GNANASUNDERAM ANANDAKUMAR

### SOLE TAMIL CANDIDATE OF THE SRI LANKA MUSLIM CONGRESS IN THE JAFFNA DISTRICT

**G.Anandakumar**

**Potpathy Road,**
**Kokuvil.**

**November 28,2001.**



**His Excellency The Ambassador**
**Embassy of the United States of America**
**Galle Road,**
**Colombo 03.**

**Your Excellency,**

Please permit me to place the following for Your Excellency's kind consideration.

I am a candidate from the Jaffna District at the forthcoming Parliamentary Election in December 2001, representing the Sri Lanka Muslim Congress (SLMC).

Even though prior to my accepting the nomination of the SLMC many other parties invited me to contest this election from their respective parties, which after much thought and consideration I decided to contest from the Sri Lanka Muslim Congress due to the fact that Tamils and Muslims who are Tamil speaking and sharing similar cultural and traditional values have only religious difference, yet remain estranged as a result of those who capitalise on situations and circumstances. One of my foremost ambitions is to see that the causes for such differences are eliminated, bringing the communities together whereby all Tamil speaking people are united together.

On this campaign trail I have had the opportunity to personally visit and meet people from all walks of life, not only in the Jaffna District but also in other districts where those displaced from the their homes, live as refugese, with flickering hope of one day returning to their ancestral homes in the North. These displaced persons though living in other districts are facing much hardship.

The question many of them asked of me was "For so many years by going to Parliament what have you achieved and what do you propose to further do?" they also went further to state that if we are not after temporary materialistic help such as building toilets or even for houses, they wished to know how I propose to fight for their rights as citizens.

Whilst explaining that this is the first occasion I am contesting Parlimentary Elections, I stated that before Sri Lanka received Her Independence as well as during the Post Independence period and even now America, other Europeon and Australian Countries have through Aid packages and also through major infrastructure development projects in especially in the areas of Technological advancement, Medicine and all other areas have and continue to assist Sri Lanka for all as citzens to benefit.

I further informed them that I stand for equal rights for all as citizens of one nation irrespective of religion, ethnicity and cultural as well as traditional differences. It is my firm belief the prevailing situation has unfortunately not been explained properly to the people but instead what has been instilled is that this is a Buddhist country with majority Sinhalese, whilst Tamil speaking people are minority, kindling further alienation of the communities.


The Diplomatic Community in Sri Lanka are aware of this and other negative situations that unfortunately prevail in this our land which over the years human values have eroded to such extents thereby destroyed the peaceful and harmonious life that our nation once had, verifiable by the references made of our Country as "Resplendent Isle, Serendipity" to name a few.

With Governments getting weak, political parties both major and small are taking political advantage where LTTE terrorism the precipitated result of suppression of rights especially to those from minority communities, over the period since Independence is portrayed from an altogether different perspective. I do certainly not endorse terrorism from whichever quarter, yet to find a lasting peace the true causes have to be determined and genuine solutions found.

My Vision is to see Sri Lanka as one nation where all her citizens as brothers and sisters of one large family live in peace and harmony which could only be brought about by a genuinely pursued effort in nation building. Firstly the destruction of human lives, property and the mayhem caused and crimes committed such as rape, denial of basic rights of individuals are covered when the victim is from the minority.

None of the election manifestos have proposed a viable settlement of this on-going conflict and the British Government has in spite of the objections from human rights groups (as exposed in the local weekend newspapers) issued "Poison Gas Launchers" to the Sri Lankan Government, which when used in the areas of conflict will destory mostly civilians caught in this conflict and certainly be nothing but genocide of the Tamil community.

Your Excellency I am placing these matters and appealing for assistance, from a nation who has much assisted Sri Lanka to improve the quality of life for all citizens, as it is imperative that these issues are urgently taken up with those at the highest level in the Sri Lankan Government to eliminate a major catastrophe in the near future.




**Thanking Your Excellency**

**Yours respectfully,**

[signature]

**G.Anandakumar.**

யாழ் கொக்குவில்

# இந்து ஆரம்ப பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2001

இன்று (30 - 11-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி விழா பிற்போடப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர்கள்
மற்றும் பாடசாலைச் சமூகம்
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(95387)

# முக்கிய அறிவித்தல்

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை பழைய மாணவர் சங்க ஆதரவுடன் (30-11-2001) இன்று நடைபெறவிருந்த "ஞான சவுந்தரி" நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

—பழைய மாணவர் சங்கம்—
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை, மானிப்பாய்.

(95376)

# வன்மையாகக் கண்டிக்கின்றோம்

திலகம் சென்ற அகிம்சாவாதிகள் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழக்க காரணமான ஆயுதக்கும்பலின் செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு இறந்த அப்பாவி பல்கலைக்கழக ஊழியருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

மணற்பகுதி வாழ் அன்புள்ளங்கள்
புத்தூர்.

(95380)

# பிற்போடப்பட்டுள்ளது

30 - 11 - 2001 இல் நடைபெறவிருந்த லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டத்திற்கான திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

- செயலாளர்

லங்கா சிமெந்து நிறுவன தொழிற் சங்கம

(சி/19559)

# பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# வரவு செலவுத் திட்டம் - 2002

255 ஆம் அதிகாரமான நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 178(3) ஆம் பிரிவிற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2002 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

தங்கள் சேவையிலுள்ள
அ. வின்சன் கென்டி J.P.U.M.
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை,

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
27-11-2001

(சி/19550)

# தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,

செயலகம், யாழ்ப்பாணம்.

## அரசாங்க அறிவித்தல்

### நாடாளுமன்றத் தேர்தல் — 05-12-2001 உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம்.

பளை, கைதடி, சாவகச்சேரி ஆகிய அஞ்சல் அலுவலகப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்களின் நலன்கருதி அவர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 2001-11-30 ஆம் திகதியும் 2001-12-02 ஆம் திகதியும் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் முற்பகல் 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-30 மணி வரை விநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இது வரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறத் தவறிய இப்பிரதேச இடம்பெயர்ந்த வாக்காளர் மேலே குறிப்பிட்ட திகதிகளில் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளும்படியும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

க. சண்முகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல. 10-யாழ்ப்பாணம்.

29-11-2001

(சி/19557)

# காரிருள் நீங்கி ஒளி பிறக்க

# ஏற்றுவோம் வெற்றித் தீபம்

அகந்தை கொண்டு ஆடுவோரும், பொய் கூறி ஏமாற்றுவோரும் இறுதியில் சத்தியத்தின் முன் தலைகுனிவர் என்ற தத்துவத்தை உலகுக்கு எடுத்தியம்பும் கார்த்திகைத் தீப நன்னாள் இன்று.

பிரம்மாவும், விஷ்ணுவும் தாமே பெரியவர் என்று மமதை கொண்டனர். ஒரு நாள் இதனால் சத்தியத்தின் உருவான சிவ பெருமான் பெரும்சோதியாக உருவெடுத்து 'சோதியின் அடியையோ முடியையோ காண்பவரே பெரியவர்!' என்றுரைத்தார். அவர்க்கு ஒரு போட்டிவைத்தார். அதைக்கேட்ட பிரம்மா அன்னப் பறவையாகி முடி தேடினார். விஷ்ணு வராக உருவெடுத்து அடிதேடிச்சென்றார். எவ்வளவு தேடியும் தமது இலக்கை அடையாது இருவரும் தோற்றனர்.

ஆனாலும் தோல்வியை ஒப்புக்கொள்ளும் மனநிலையற்ற பிரம்மா, தான் முடியைக் கண்டதாக தாழம்பூ ஒன்றை பொய் கூற வைத்தார். மமதையால் மதியிழந்து சாட்சியானார். கூடா நட்பின் விளைவாய், வாசம் மிகுந்த மலரான போதும் தாழம்பூ பூசைக்கு ஒவ்வாமல் போனது. பாவம் பிரம்மாவுக்கோ தனியே கோயிலே இல்லாமல் போனது.

விளக்கீடு என்ற தினமாம் கார்த்திகைத் தீபத்துக்கு புராணம் கூறும் கதையிது. காலம் காலமாய் கேட்டுவந்த விளக்கமது.

அன்று மட்டுமல்ல; இன்றும் அதிகார மமதை கொண்டு மக்களை வாட்டுவோரும், ஆணவத்தால் தலைகால் புரியாது, ஆடுவோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அதிலும் சிலர் பிரம்மா போன்று தமது கபடத் தனத்துக்குப் பொய்ச் சாட்சிகளை காட்டியும் வருகின்றனர்.

ஆனால் சத்தியத்தின் உருவாக சோதியாய் வடிவெடுத்து மமதையால் மதியிழந்தோரின் செருக்கடக்கும் காலம்தான் இன்னமும் வரவில்லை.

ஆகவேதான் அக்காலம் விரைவில் வரவேண்டி கார்த்திகைத் திருநாளில் தீபச்சுடர் ஏற்றுவோம்.

மனமென்னும் சுட்டியில் அறிவென்ற திரியிட்டு உழைப்பென்ற எண்ணெய் ஊற்றி ஏற்றுவோம் தீபம் இன்று; அது பரப்பும் வெற்றி ஒளி இங்கு.

'இருட்டு, இருட்டு என்று' புலம்பித் திரிவதை விட்டு, கார்த்திகைத் தீபத்துடன் இருள் நீக்கி ஒளி பரப்ப சுடர் ஒன்று ஏற்றுவோம். பின்னிய துயரங்கள் தீரவென்று வீடுகளில் ஏற்றுவோம் தீபம் இன்று.

சொந்த இடம்விட்டு நமை விரட்டி கொக்கரிப்போர் கொட்டம் அடங்க —

வெந்த புண்ணில் வேலாக எமை வாட்டுவோர் மண் கவ்வ —

அடிமையாய் எமைஎண்ணி குட்டுவோர் வெருண்டோட —

பிரம்ம, விஷ்ணுவாய், 'படைப்பதும் காப்பதும் நாமே' என்று, எமை ஏய்ப்போர் ஏமாந்து போக —

மமதை கொண்ட அவர் சிந்தை கலங்கி, நடுங்கி மாய —

கார்த்திகைத் தீபத் திருநாளில் காரிருள் நீங்கி ஒளி பிறக்க —

நமது வாழ்வில் விடிவுவர —

திருக்கார்த்திகைத் திருநாளில் ஏற்றுவோம் தீபங்கள்.

— மதுமிதா —

## கார்த்திகை தீபத்திருநாள் இன்று

## தென்மராட்சி மாணவருக்கு!

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியிலுள்ள கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் உரிய நேரத்துக்குச் சமுகமளித்து தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் த. கந்தையா அறிவித்துள்ளார். (க-5)

★ ★ ★

மட்டுவில் தெற்கு கனிஷ்ட வித்தியாசாலையில் இருந்து ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை சனிக்கிழமை முதல் எம். சின்னத்தம்பி, சம்பியன் லேன், கொக்குவில் என்ற முகவரியில் வைத்தும் —

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமைமட்டும் நெல்லியடி மத்திய மகாவித்தியாசாலையில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயத்தில் வைத்தும் —

வழங்கப்படும் எனப் பதில் அதிபர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

கைதடி, நாவற்குழி அ. த. க. பாடசாலையில் இருந்து ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளும், அடையாள அட்டைகளும் நவாலி சென். பீற்றேர்ஸ் வித்தியாலயத்துக்கு அருகில் வைத்து வழங்கப்படும் என அதிபர் அறிவித்துள்ளார். (க-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலரும், கழக உறுப்பினருமாகிய

## திரு. வைத்தி கனகராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டச் செயலக அலுவலர்களும்,
கழக உறுப்பினர்களும்.
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/19549)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாமுத்து விசாகப்பெருமாள்

(தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை வைத்தியசாலை)

சுன்னாகம் பருத்திக்கலட்டியை பிறப்பிடமாகவும் கொத்தாவத்தை மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாமுத்துவிசாகப்பெருமாள் நேற்று 29-11-2001 வியாழக்கிழமை சுன்னாகத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :-
வி. சசிகரன்
(மகன்)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

(95390)

## விசுவலிங்கம் சபாரத்தினம்

(முன்னாள் வலி. வடக்கு பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் — மல்லாகம்)

விசுவலிங்கம் சபாரத்தினம் நேற்று (29-11-2001) வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மல்லாகம் மலேயன் பென்சனியர் விசுவலிங்கம் — தங்கமுத்து அம்பாள் தம்பதிகளின் புதல்வரும், திருமதி பஞ்சமசோதி சபாரத்தினத்தின் (அவுஸ்திரேலியா) அன்புக் கணவரும், திருமதி பிரகஸ்பதி குணலிங்கம் (அவுஸ்திரேலியா), பிரதாபன் (அவுஸ்திரேலியா), பிரதீபன் (U. K.), Dr. சோமசுந்தரம் (அவுஸ்திரேலியா), பாலசுந்தரன் (U. K.), கேதாரநாதன் (அவுஸ்திரேலியா), கதிர்காந்தா (அவுஸ்திரேலியா), கிரிதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மல்லாகம் V. M. குமாரசுவாமி, திருமதி இ. சற்குணதேவி, Dr. வி நமசிவாய, வி. தையல்நாயகி மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வி. குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், துன்னாலை வல்லிபுரம் — சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பருத்தித்துறை சட்டத்தரணி வ. செல்லத்தம்பியின் மைத்துனரும், காலஞ்சென்ற உடுவில் தொத்தாரிஸ் சபாபதிப்பிள்ளையின் பேரனும், காலஞ்சென்ற மலேசியா N. இளையதம்பி கே. வி. பீள் பெறாமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கு. விசுவலிங்கம்
பெறாமகன்
(சட்டத்தரணி)

லிங்கஸ்தான்,
மல்லாகம்.

(95381)

# அறநெறி வகுப்பு

சாவகச்சேரி, டச்சு வீதி அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தின் ஆதரவில் நடத்தீப்படும் ஸ்ரீ பழனி அறநெறிப் பாடசாலை கடந்த 24.11.2001 தொடக்கம் உரும்பிராய், பலாலி வீதி கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ள இராச ஒழுங்கையில் நடத்தப்படுவதால், மேற்படி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகளைப் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ வழக்கம்போல ஒழுங்காகச் சமுகமளிக்கும் மாணவ, மாணவி களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

வை. இராசரத்தினம்
தலைவர்

ம. விவேகானந்தன்
செயலாளர். (C-19551)

## இரத்தம் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு அனைத்து பிரிவு இரத்தங்களும் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்) அணியினர் நேற்று இரத்த தானம் செய்ததாகவும் -

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும் -

அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

(ஜ-15)

# விடுமுறை தினமான இன்றும் தபால் சேவை வழமைபோல்

யாழ்ப்பாணம்,நவ.30

எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு, போயா விடுமுறை தினமான இன்று யாழ்.தபாலகங்கள் விசேட சேவைக்காகத் திறக்கப்படும்.

- இவ்வாறு யாழ்.பிரதம தபாலதிபர் எஸ்.மார்க்கண்டு தெரிவித்தார். வாக்காளர் அட்டைகள் விநியோகமும் தபால் விநியோகமும் வழமைபோல் இன்றும் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்றையதினம் குடாநாடு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோதிலும், யாழ்பிரதம தபாலகம் வழமைபோல் இயங்கியதை அவதானிக்க முடிந்தது.

எனினும் வாகனப்போக்குவரத்து நேற்று முழுமையாக தடைப்பட்டதால் தூர இடங்களில் இருந்து தபாலக ஊழியர்கள் வரமுடியவில்லை. இதன் காரணமாக தபால் அலுவலகங்கள் சீராக இயங்கவில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-6)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ். மத்திய கல்லூரி விவாத அரங்க அணி நடத்தும் விவாதப் பயிற்சிப் பட்டறை திட்டமிட்டபடி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சிப்பட்டறைக்கு செல்வன் இ.வினோதராஜ் தலைமை வகிக்கிறார்.

அழைப்பு அனுப்பப்பட்ட அனைத்து கல்லூரி மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(ஓ)

# தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு
# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



தனிப்பெருந்தலைவர்
ஜீ.ஜீ.பொன்னம்பலம்



வேங்கையின் மைந்தன்
கஜேந்திரகுமார்



தியாக வேங்கை
குமார் பொன்னம்பலம்

தமிழர் தனித்துவம் காத்த தன்னிகரில்லாத் தமிழ்த் தலைவர் ஜீ.ஜீ.யின் பேரன்,
உன்னதமான உயிரை உங்களுக்காகத் தியாகம் செய்த ஒப்பரிய தலைவன்
குமாரின் ஒரே மைந்தன்
இளைய தலைமுறையினரின் இனிய தலைவன்

**கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்**

அவர்களை ஆதரிப்போம்.
தமிழர் தலைநிமிர்வர் இவரால்
தமிழர் வாழ்வு சிறக்கும் இவரால்
பழகுதற்கு மிகவும் இனிமையானவர், பண்பானவர்,
அழகிய ஆங்கிலப் பேச்சு வன்மை உடையவர்,
எவருக்கும் அஞ்சாது நீதியை எடுத்துரைக்கவல்லவர்,
எங்கும் செல்லுவார்; எதிலும் வெல்லுவார்.
தலைமை தாங்கும் தன்மையும், வாக்கு வசீகரமும், துணிவும், நெஞ்சில்
நேர்மையும், அச்சமற்ற தன்மையும், அயராத உழைப்பும்
இவரின் பரம்பரைச் சொத்துக்கள்
பெரும்புகழ் பெற்ற பேரனைப்போலத், தந்தையைப் போலத்
தமிழர் தன்மான வாழ்வுக்காக
அவர்கள் இல்லாத நிலையில் உழைக்க முன் வந்துள்ள இவரை,
இந்த இளம் வீரனை ஆதரியுங்கள்.

*கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்* இல. 8

எல்.எல்.பி.சிறப்பு லண்டன், பரிஸ்ரர்
(லிங்கன்ஸ் இன்) லண்டன், சட்டத்தரணி - இலங்கை.
கொள்கை மாறாதவர், கொடுமை கண்டு அஞ்சாதவர்,
சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்பவர்


*திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி* இல. 1

சிந்தனையாளர், செயல் வீரர், சிறந்த நிர்வாகி

*திரு. சி. வி. கந்தையா சிவஞானம்* இல. 5

தேசத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துங்கள். ஒன்றுபட்டுநில்லுங்கள்
சமாதானம், சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் இவற்றை ஆதரித்து வாக்களிப்போம்.
தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டுவிட்டன, தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது.
தமிழினத்தை இனி அசைக்க முடியாது எனத் தமிழினப் பகைவர்களுக்கு உணர்த்துவோம்.
சிங்களக் கட்சிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் தோற்கடிப்போம்.

'வாழ்க தமிழ்'.
எமது விருப்பு வாக்குகள்
மூன்றும் தியாக மாமனிதரின் கட்சிக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி  X

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 2 | 3 | 4 | X5 | 6 | 7 | X8 | 9 | 10 | 11 | 12 |

(94878) அல்வாய், உடுப்பிட்டி வாழ் மக்கள்.

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புனித மிக்கேல் ஆலயம் - உரும்பிராய்**

மேற்படி ஆலய புனரமைப்பு வேலைகளுக்கென 300,000/= ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் 150,000/= ரூபாவை எமக்கு வழங்கி உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



கோப்பாய் பிரதேச சபைத் தலைவர்
**பூதன் குணசிங்கம்**
(J.P.U.M.) அவர்களையும் -



எமது கோப்பாய் பிரதேச சபையின்
உப தலைவர் **திரு.U.L.A.ரவி**
அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தையும் பங்கு மக்களும்,
புனித மிக்கேல் ஆலயம்,
உரும்பிராய்.

(95383)

# கைத்தொழில் வணிகர் மன்றம்

மீசாலை

இழப்பீட்டுக் கொடுப்பனவு பெறத் தவறியவர்கள் நாளை (01-12-2001) சனிக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரியில் தவறாது சந்திக்கவும்.

\- செயலாளர்.

(95378)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு. வே. கந்தசாமி
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(95385)

# பாரதி அக்கடமி

திவ்யஜீவன சங்கம் முன்பாக, சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.

**N.E.I. இயங்கிய அதே இடத்தில்**
**அதே ஆசிரியர் குழுவுடன்**
**தனித்துவமான கல்விச் சேவை.**
**புதிய கல்வி ஆண்டு ஆரம்பம்**
**01.12.2001 (சனிக்கிழமை) 10 மணிக்கு.**

தி.செல்வமனோகரன்,
நிர்வாகி.

(95374)

# ஞானோதய சபையின் வாழ்த்துக்கள்

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவராகப் பல்லாண்டு காலம் அருஞ்சேவைசெய்து, தற்போது கலைத்துறைப் பீடாதிபதியாகப்பதவி ஏற்றிருக்கும்.

பேராசிரியர், கலாநிதி
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

பாலர்ஞானோதய சபையினரின் நூல்கள் வெளியீட்டு வைத்த பெருந்தகையே!

தாங்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பணிபுரிய காசி விநாயகர் கருணைபுரிவாராக.

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

சி. கணேசலிங்க குருக்கள்
தலைவர்

(95384)

## கார்ச் சாரதியும் காயம்!

யாழ்ப்பாணம்,நவ.30

நாரந்தனையில் தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த கார்ச்சாரதி ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பயணம் செய்த காரின் சாரதியான நல்லூர் டநாதர் வீதியைச் சேர்ந்த சந்திரசா கணேசலிங்கம் என்பவரே ஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவருக்குச் சொந்தமான கார் த்து நொறுக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## வேம்படியில் ஒளி விழா

யாழ்ப்பாணம்,நவ.30

வேம்படி மகளிர் கல்லூரியின் ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஐ-10)

## இன்று

யாழ்ப்பாணம்,நவ.30

சாரணிய ஆசிரியர்களுக்கான இரு நாள்கள் பயிற்சிநெறி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஐ-10)

## நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

நாளை சனிக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவிருந்த யாழ். கல்வி வலயத்தின் விளையாட்டு விழா வேறொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவிருந்த - விளையாட்டுப்போட்டிகளில் வெற்றியீட்டிய - மாணவர்களின் பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு வருகை தருமாறு யாழ். கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

★ ★ ★

இன்று நடைபெறவிருந்த யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் நடைபெறமாட்டாது என சங்கச் செயலாளர் எஸ். சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.(க-7)

★ ★ ★

யாழ்பல்கலைக்கழகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த வெளிவாரிப் பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 'தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (க-ரி)

# வன்முறைகளுக்கு எதிராக மக்கள் களமிறங்கவேண்டும்

வன்முறைக் கலாசாரத்துக்கு எதிராக மக்கள் சக்தி முழுமையாக விழிப்படைந்து களமிறங்க வேண்டும் அராஜகங்களுக்கு எதிராக ஒவ்வொருவரும் கிளர்ந்தெழாவிடில் மோசமான சம்பவங்கள் நிகழலாம்.

- இவ்வாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் அறிக்கை ஒன்றில் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ்.தீவகப்பகுதியில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பாகவே இந்த அறிக்கை விடப்பட்டது.

நாசகாரவேலைகளைப் புரிவதும் பின்னர் வார்த்தை ஜாலங்களில் அவற்றைப் பூசி மெழுக முயல்வதும் ஒரு நாகரிகமாக ஒரு சாரால் கருதப்பட்டுவருகிறது.கடந்த பொதுத் தேர்தலில் வன்முறைகளை அம்பலப்படுத்தியமை காரணமாக ஊடகவியலாளர் நிமலராஜன் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இக்கோரத்தைப் புரிந்தவர்கள் யாரென்பதை முழு உலகமுமே அறியும்.

யாழ்.தீவகப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையில் யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இத்தகைய சாபக்கேடுகள் முடிவிற்கு வரவேண்டுமாயின், மக்கள் சக்தி முழுமையாக விழிப்படைந்து, களமிறங்கி ஆயுதக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

பெருந்தொகையான மக்கள் ஒருபுறம் விடியலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்க, இன்னொருபுறம ஜனநாயகப் போர்வையுடன் ஆயுதபாணிகளாக இளைஞர்கள் சிலர் தவறான பாதையில் பயணிப்பது மக்கள் நலனிற்கு முரணானது என்பதைப் புரிந்துகொண்டு, சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தியவதன நிலமேயின் வீட்டின் மீது குண்டுவீச்சு

கண்டி,நவ.30

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மீது புதன் இரவு குண்டு ஒன்று எறியப்பட்டது. வீட்டின் இடது புறம் உள்ள பன்சலைப் பக்கமாக இருந்து குண்டு வீசப்பட்டதால் வீட்டின் பின்புறத்தில் ஆழமான குழி ஒன்று மட்டுமே ஏற்பட்டுள்ளது. குண்டு வீசப்பட்டபோது தியவதன நிலமே வீட்டில் இருக்கவில்லை. அவர் வெளிநாடு சென்றிருக்கின்றார். அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் சம்பவத்தின்போது வீட்டில் இருந் தனர். ஆனால் எவருக்கும் எந்த அனர்த்தமும் ஏற்படவில்லை. வீடு இப்போது பலத்த காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி தலதா மாளிகையை ஜேவிபி யினரே முதலில் தாக்கினர் என்று கடந்த வாரம் தியவதன நிலமே செய்தியாளர்களிடம் கூறியது தெரிந்ததே.(ஐ)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர் சேவை தரம் 2இற்கு நியமனம் பெற்றுள்ள எமது பாடசாலையின் அதிபர்

**திருமதி தவமலர் சுரேந்திரநாதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
கெருடாவில் இ.த.க. பாடசாலை.

9563)


# நல்லூர் பிரதேச சபை

# வீதிகள் புனரமைப்பு

ல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருத்தப்பட வேண்டிய வீதிகள் பொதுமக்களினதும், பகுதியின் பொது நிறுவனங்களினதும் வேண்டுதலுக்கு அமைவாக கீழ்க்காட்டப்படும் வீதிகள் 1ஆம் ஆண்டு திருத்த வேலை சபை நிதி மூலம் மேற்கொள்ள நடவடிக்கை க்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

| ல. | வீதியின் பெயர் | அமைவிடம் |
|---|---|---|
| 1. | சீ.சீ.ரி.எம்.எஸ். வீதி | கொக்குவில் மேற்கு |
| 2. | பொன்னையா வீதி | கொக்குவில் மேற்கு |
| 3. | மாதா கோயில் வீதி | கொக்குவில் மேற்கு |
| 4. | கோணாவளை வீதி | கொக்குவில் கிழக்கு |
| | கலைவாணி மில் வீதி | கொக்குவில் கிழக்கு |
| | கருவப்புலம் வீதி | கொக்குவில் கிழக்கு |
| 7. | பிரம்படி முதலாம் ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| | பிரம்படி இரண்டாம் ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| | கல்லூரி ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| | அப்பையா வீதி | கொக்குவில் மேற்கு |
| | மணியர்பதி முதலாம் ஒழுங்கை | கொக்குவில் மேற்கு |
| | கேணியடி - சிவகுரு வீதி தொடர் | கொக்குவில் மேற்கு |
| | பழம் வீதி | ஆனைக்கோட்டை |
| | நந்தாவில் வீதி | கொக்குவில் கிழக்கு |
| | மஞ்சத்தடி வீதி | இணுவில் |
| | சச் வீதி முதலாம், இரண்டாம் குறுக்கு வீதி | கொக்குவில் கிழக்கு |
| | விக்கினேஸ்வரா பாடசாலை வீதி, உப்புமடம் | கோண்டாவில் மேற்கு |
| | புவனேஸ்வரி அம்பாள் வீதி, உப்புமடம் | கோண்டாவில் மேற்கு |
| 19. | உடையார் வீதி குறுக்கு ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| 20. | கோண்டாவில் வடக்கு பொதுக் கிணறு வீதி | கோண்டாவில் மத்தி |
| 21. | நாமகள் பாடாசாலை வீதி | கொக்குவில் கிழக்கு |
| 22. | சென்.செபஸ்தியார் தொடர் வீதி | கோண்டாவில் கிழக்கு |
| 23. | முத்தட்டு ஒழுங்கை | கோண்டாவில் மேற்கு |
| 24. | மணியகாரன் முதலாம் ஒழுங்கை | கொக்குவில் கிழக்கு |
| 25. | வாலையம்மன் வெள்ளைப்பிள்ளையார் வீதி | திருநெல்வேலி கிழக்கு |
| 26. | வீரபத்திரர் வீதி | நல்லூர் வடக்கு |
| 27. | மதவடி வீதி | கல்வியங்காடு |
| 28. | குளங்கரை வீதி | கோண்டாவில் கிழக்கு, ஸ்ரேசனடி |
| 29. | கோயில் வீதி 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள் | கொக்குவில் கிழக்கு |
| 30. | பரியாரியார் வீதி | கொக்குவில் கிழக்கு |
| 31. | சைவப் பாடசாலை வீதி 1ஆம், 2ஆம், 3ஆம் வீதிகள் | கோண்டாவில் மேற்கு |
| 32. | சிவகாமியம்மன் தொடர் வீதி | இணுவில் |
| 33. | பூதவராயர் கிளை வீதி | திருநெல்வேலி கிழக்கு |
| 34. | கலாசாலை வீதி 2ஆம், 3ஆம், 4ஆம் ஒழுங்கை | திருநெல்வேலி |
| 35. | முருகன் வீதி | திருநெல்வேலி |
| 36. | கேணியடி வீதி | திருநெல்வேலி |
| 37. | கெனடி வீதி | திருநெல்வேலி |
| 38. | சைவப்பாடசாலை குறுக்கு வீதி | திருநெல்வேலி |
| 39. | லோட்டஸ் வீதி | கொக்குவில் மேற்கு |
| 40. | குமரகோட்டம் - நெட்டிலிப்பாய் வீதி | கோண்டாவில் மேற்கு |
| 41. | குமரகோட்டம் - வைத்திலிங்கம் வீதி | கோண்டாவில் மேற்கு |
| 42. | உதய சூரியன் ச.ச.நிலைய வீதி | காரைக்கால், இணுவில் |
| 43. | குமரகோட்டம் - காரைக்கால் வீதி | காரைக்கால், இணுவில் |
| 44. | பாலவிநாயகர் வீதி | கோண்டாவில் கிழக்கு |
| 45. | தொழில்நுட்பக் கல்லூரி - ரான்ஸ்போமர் ஒழுங்கை | பிறவுண் வீதி, கொக்குவில் |
| 46. | தொழில்நுட்பக் கல்லூரி - வடக்கு வீதி | பிறவுண் வீதி, கொக்குவில் |
| 47. | கோட்டவெளி வீதி | காரைக்கால், இணுவில் |
| 48. | ஐயனார் 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதி | கொக்குவில் மேற்கு |
| 49. | மகமாயி 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதி | கொக்குவில் கிழக்கு |
| 50. | திருநாவுக்கரசு வீதி | கொக்குவில் கிழக்கு |

தலைமையலுவலகம்,
பிரதேச சபை,
ல்லூர்.
-11-2001.

துரை தவராஜா J.P.
உப தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.


## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம்

இடம்:- கோண்டாவில் ஸ்ரீ நாராயண கோயில் அருகில்

நேரம்:- இன்று மாலை 4 மணிக்கு

ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர்களும் வேட்பாளர்களும் உரையாற்றுவர்.

அனைவரும் வருக.

(C/19564) - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி.

## இடமாற்றம்

நீராவியடி, 24,சிவகுருநாதர் வீதி, தோப்பு மாணிக்கப்பிள்ளையார் கோயில் பூசை, குருத்துவம் அனைத்துப் பொறுப்புகளிலும் இருந்து விலகி கீழ்க்காணும் விலாசத்தில் இருக்கிறேன் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள்
ஸ்ரீநாகேந்திரபீடம்,
48,புகையிரத நிலைய வீதி,
(செல்வநாகபூஷனி அம்மன் கோயில் அருகில் கந்தர்மடம்)

(95394)


## மரண அறிவித்தல்கள்

### பரராஜசிங்கம் சுப்பிரமணியம்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் சுப்பிரமணியம் நேற்று (29.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 4.40 மணியளவில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் பார்பதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவஞானசுந்தரம், பரமேஸ்வரி, சுப்பிரமணியம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2001) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*அல்லாரை வடக்கு,* சு.இராசரத்தினம்
*கொடிகாமம்.* (95393) (சிங்கம் - மகன்)

### அன்னப்பிள்ளை தம்பு

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான கனகரத்தினத்தின் சகோதரியும், பாலாம்பிகையின் மைத்துனியுமாகிய அன்னப்பிள்ளை தம்பு நேற்று (29.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காலமானார்.

அன்னார் அருந்தவமலர் (மிஷன் ஆஸ்பத்திரி, புத்தூர்), அருந்தவராஜா (இரசாயனக் கூட்டுத்தாபனம்), இராஜேஸ்வரி, ராசமாணிக்கம், கமலாதேவி, கமலேஸ்வரன், கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருளியா, எலன்ரைன்போல் (2001, வர்த்தகப் பிரிவு, பரியோவான் கல்லூரி), ஒஸ்போர்ன், கிர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2001) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
*30/2, விதானையார் வீதி,* S.போல்,
*சுண்டுக்குளி.* (95395) P.சாந்தகுமார்.

# காயமடைந்த மூவரின் சாட்சியம் பதிவு

தமிழர் கூட்டமைப்புப் பிரமுகர்கள்மீது நேற்றுமுன்தினம் தீவகத்தில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின்போது உயிரிழந்த ஏரம்பு பேரம்பலத்தின் மரண விசாரணை நேற்று நடைபெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மூவரின் வாக்குமூலங்களை யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து நேற்று பதிவு செய்தார்.

யாழ். மாவட்ட வேட்பாளர் மகாலிங்கம் சிவாஜிலிங்கம் மற்றும் நடராசா கனகரத்தினம் (விந்தன்), அரியரட்ணம் சோதிபாலா (சங்கர்) ஆகிய மூவரின் வாக்குமூலங்களே நேற்று பதிவுசெய்யப்பட்டன.

முன்னதாக நேற்றுக்காலை யாழ். நீதிவான் நீதிமன்றில் வைத்து யாழ். மாநகர சபை மேயர் நடராஜா ரவிராஜ் வாக்குமூலம் அளித்தார்.

இறந்தவரின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி இச்சம்பவத்தின் எதிரொலியாகக் குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் -

இதனால் சாட்சிகள் மன்றுக்குச் சமுகமளிக்க முடியவில்லை என்றும் -

சம்பவத்தில் காயமடைந்தவர்களான - சம்பவத்தை நேரில் கண்டவர்கள் - சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவித்தார்.

அவர்கள் வாக்குமூலம் அளிக்கக்கூடிய நிலையில் இருப்பதால் வைத்தியசாலைக்குச் சென்று அவர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் - விண்ணப்பித்தார்.

இதனடிப்படையில் நேற்றுப் பிற்பகல் வைத்தியசாலைக்குச் சென்ற நீதிவான் மூன்று பேரின் வாக்குமூலங்களையும் அங்கு பதிவுசெய்தார்.

மரண விசாரணை இன்று காலை 10மணிக்கு யாழ். நீதிவான் நீதிமன்றில் தொடர்ந்து நடைபெறும் என நேற்றைய விசாரணையின் முடிவில் அவர் அறிவித்தார்.

(உ-6-15)

## அமைதி காக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு எங்கும் பரவலாக இடம்பெற்று வரும் சம்பவங்களை அடுத்து அவர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

## ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலினால் சீற்றமுற்ற பொது மக்களே இத்தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும் என அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

இதேசமயம் -

மந்திகையில் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த 'கட்-அவுட்'டுகளும் நேற்று அடித்து நொறுக்கப்பட்டன.

நெல்லியடியில் ஏற்பட்ட களேபரத்தை அடுத்து அங்கு விரைந்த பொலீஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி ஆள்களைக் கலைத்தனர்.

அங்கு தாக்குதல் நடதத வாகனத்தில் வந்தோர் பல இடங்களிலும் கட்டப்பட்டிருந்த ஈ.பி.டி.பியின் 'கட்-அவுட்'டுகளை அடித்துச் சேதப்படுத்தினர். (உ-ரி-4-5-6-31-109-173-180)

## ஈ.பி.டி.பி. தரப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள்வெட்டுக்கு இலக்காகி காலில படுகாயமடைந்ததாகக் கூறப்படும் ஜெகனை (வயது 20) வீதியோரத்தில் கண்டு மீட்டெடுத்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அவரை மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தங்களது வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு அருகே சந்தேகமான முறையில் இவர்கள் நடமாடியதாகவும் -

அதனால் தமது ஆதரவாளர்கள் அவர்களைப் பிடித்து விசாரித்தபோது பிஸ்டலுடன் அவர்கள் அங்கு நடமாடியது தெரியவந்ததாகவும் -

ஐதேகட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரனின் காவலர்களில் ஒருவரான பாபு என்பவரே அனுமதி (லைசென்ஸ்) பெற்று வழங்கப்பட்ட பிஸ்டலுடன் மற்றைய தமது ஆதரவாளர்களுடன் பெற்றோல் வாங்குவதற்காக ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த போது வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதாக ஈ.பி.டி.பி. தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-173-117-109-180)

# ஈ.பி.டி.பியைத் தடைசெய்யக்கோரி பல லட்சம் ஒப்பங்கள் திரட்டல்!

## மகேஸ்வரன் மேற்கொள்ளும் முயற்சி

யாழ்ப்பாணம்,நவ.30

தமிழ் மக்களின் ஆத்ம அபிலாஷைகளுக்கு எதிராக யாழ்.மண்ணில் செயற்பட்டுவரும் ஆயுதக்குழு ஈ.பி.டி.பி.எனத் தெரிவித்து, அதைத் தடைசெய்யக்கோரி பல லட்சம் மக்களின் கையொப்பத்தைப் பெறும் இயக்கம் ஒன்றை ஐ.தே.கட்சியின் யாழ்கிளை நேற்று ஆரம்பித்திருக்கின்றது.

நேற்று மாலை இளவாலையில் நடைபெற்ற - கட்சியின் 32ஆவது பிரசாரக் கூட்டத்தில் - இந்த இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யாமல், தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்படும் ஈ.பி.டி.பியையே தடைசெய்ய வேண்டும். இதற்கு ஆதரவாக பல லட்சம் மக்களின் ஒப்பத்தைப் பெற்று, புதிதாக ஆட்சியமைக்கப் போகும் ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கவுள்ளோம்.

"இளவாலைக் கூட்ட மேடையில் இந்தக் கையொப்ப இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, அதில் நாங்கள் ஒப்பமிட்டுக்கொண்டிருந்த சமயமே மேடையை நோககி - குறிப்பாக என்னை இலககு வைத்து - துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன." - என்றார் தி.மகேஸ்வரன்.

(உ


எக்சலன்ற் கல்வி நிலையம்
(விக்னேஸ்வரா வீதி) நெல்லியடி
2002
கல்வி யாண்டுக்கான
புதிய வகுப்புகள்
தரம் - 6 - (O/L) வரை
ஆரம்பம்:- 30-11-2001
(வெள்ளி காலை 8.00 மணி)

SUBRA (14)
சித்தன்கேணி
2002 A/L
DAY CIASS
ஆரம்பம்:- 01.12.2001
(சனி - காலை 7.30)

எவெற் கல்வி நிறுவனம்
102, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு - 2002
தரம் 6 முதல் O/L வரை
ஆரம்பம் :- 30.11.2001
வெள்ளி காலை 9 மணி.
O/L 2001 டிசெம்பர் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். (95344)

எமது புதிய CD வெளியீடு
ஆளவந்தான்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/19562)

வலி.மேற்கில் தன்னிகரில்லா
ஒரே நிறுவனம்
SUBRA (14)
பெற்றோர்களே! மாணவர்களே!!
உங்கள் எதிர்காலக் கல்வி சிறப்புற, உயர்சித்தி பெற நீங்கள் நாடவேண்டியது
SUBRA (14)
சித்தன்கேணி
தரம் 3 - O/L வரை
புதிய பிரிவு 01.12.2001
காலை 7 மணி

BARATHY
சித்தன்கேணி
புதிய வகுப்புகள்
தரம் 5 முதல் 11 வரை
நாளை ஆரம்பம் - 01.12.2001
சனி - 8 மணி
எமது தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்
விஞ்ஞானம் - திரு. தேவா
- திரு. பாலச்சந்திரன்
கணிதம் - திரு. எஸ். சிவரூபன்
- திரு. சிவா
தமிழ் - திரு. சின்னத்தம்பி
- திரு. தவரட்ணம்
ஆங்கிலம் - திரு. விஜயபாஸ்கரன்
- திரு. கரிகரன்
சமூகக்கல்வி - திரு. ஜெகன்
வர்த்தகம் - திரு.லோகேஸ்வரன்
சமயம் - திரு. தரன், திரு. சிறி
01.12.2001 இல் இருந்து அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு:- மேலே குறிப்பிட்ட பிரபல ஆசிரியர்கள் இந்த பிரதேசத்தில் வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்க மாட்டார்கள். (95389)

எக்சலன்ற்
கல்வி நிலையம் இணுவில்.
தரம்
9,10, (O/L) இற்கான
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்:-
இன்று (30.11.2001) வெள்ளி
மாலை 2.00 மணி.
(திகழ் கல்வி நிலையத்தில் இயங்குகின்றது.) (95382)

பொறியியல் துறைக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு
எம் வாழ்த்துக்கள்!
உங்களுக்காகவென்றே தனித்துவம் வாய்ந்த பயிற்சி நெறியொன்றினை உருவாக்கியுள்ளோம்
ENGINEERING DRAWING WITH AutoCAD
ஆரம்பம் : 01.12.2001 பகல் 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு இயக்குநர்,
IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தரம் 1 முதல் O/L வரை
புதிய கல்வியாண்டு வகுப்புகள்
ஆரம்பம்: 01-12-2001
(நாளை) சனி 8.00 மணி
(95304)


| | |
|---|---|
| ★ கணிதம் திரு.P.ஜெயக்குமார் | ★ விஞ்ஞானம் திரு.E.J.K.யுபன் |
| ★ சமூகக்கல்வி திரு.K.S.முத்துலிங்கம் | ★ தமிழ் திரு.W.ஜெயபால் |
| ★ ஆங்கிலம் திரு.K.ரமணதாசன் | ★ வர்த்தகம் திரு.N.T.S.சுபநாதச |
| ★ சமயம் செல்வி.T.மீரா | ★ சுகாதாரம் திரு.[illegible].மகேஷ் |


நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
கல்வியாண்டு - 2002
ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை
தனித்துவம் மிக்க ஆசிரியர் குழு.
ஆரம்பம்:- 01.12.2001 (6 மணி) சனி. (95360)


## 31ஆம் நாள் நினைவஞ்சல



**பண்டிதர் தம்பிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களில் எந்தையே!
எமை நெறிப்படுத்த நித்தம் நீ உரைத்த குறள் -

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

பொன்மொழியாரகம்,
வதிரி, கரவெட்டி.

- குடும்பத்தினர். (C/19439)


ஓராண்டு நிறைவில் உளம் மகிழ்ந்து வாழ்த்துக்கள்
யாழ். வீதி, மானிப்பாயில் அமைந்திருக்கும்
"அன்பு ஜுவலேர்ஸ்" ஸ்தாபனத்தினர்
தமது ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பரிபூரணமான மகிழ்ச்சியை அடைகின்றார்கள்!
அசல் 22 கரட் தங்க நகைகளை நவீனபாணியில் தரமாகத் தயாரித்துப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
"அன்பு ஜுவலேர்ஸ்"
'தெய்வீகம்'
மானிப்பாய்.
(95314)
திரு க.பஞ்சலிங்கம்
(உரிமையாளர்)



நாடாளுமன்றத் தேர்தல் - 2001
அன்பிற்கினிய யாழ்.மாவட்ட வாக்காளர்களே!
அழிவு தரும் யுத்தத்தை இல்லாமற் செய்வோம்!
அமைதியையும் சமாதானத்தையும் மீட்டிடுவோம்!
இராணுவ இராஜ்ஜியத்தை நீங்கிடச் செய்வோம்!
சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்போம்!
அழிக்கப்பட்டவற்றைக் கட்டியெழுப்புவோம்!
உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்துவோம்!
மகிழ்வோடும் செழிப்போடும் வாழ வழி செய்வோம்!
தம்பிராஜா சுபத்திரன்
(றொபேட்)
மீன் சின்னத்திற்கே வாக்களியுங்கள்
(94881)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ்.மாவட்டம்

# முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



பொற்பதி வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

ஞா.ஆனந்தகுமார்
நவம்பர் 28, 2001

அதி உயர் ஸ்தானிகர்,
பிரித்தானிய ஸ்தானிகராலயம்,
காலி வீதி,
கொழும்பு.

உயர் ஸ்தானிகர் அவர்கட்கு,

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை தயவுகூர்ந்து தங்களின் கவனத்திற்கு முன் வைக்கின்றேன்.
நான் 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகிறேன். வேட்புமனுத் தாக்கலுக்கு முன் என்னை வேறு பல கட்சிகள் தங்களின் கட்சியின் சார்பில் போட்டியிடுமாறு வேண்டிக்கொண்டன.

நான் சிந்தித்து எடுத்த முடிவிற்கமைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட முடிவுசெய்தேன். தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரேமொழி பேசுவதாலும், கலாசார கூற்றில் ஒற்றுமை இருப்பதாலும் மதத்தால் ரம் வேறுபட்டிருப்பதாலும் நான் முஸ் லிம் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் முன்னிற்க முடிவெடுத்தேன். தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தி ஓர் அணியில் திரள வைப்பதே எனது இலட்சியமாகும்.

எனது தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது அனைத்து மக்களையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. யாழ்.மாவட்ட மக்களை மாத்திரமல்ல, பிற மாவட்ட மக்களையும், யாழ்.மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்கள், தாங்கள் மீண்டும் யாழ்.மண்ணில் மீளக் குடியேறுவோம் எனும் நம்பிக்கையுடன் வாழ்வதையும் அவர்களின் துன்ப துயரங்களையும் அறிந்து கொண்டேன். இவ்வளவு காலமும் நாடாளுமன்றம் சென்றவர்களால் நாம் அடைந்தது என்ன? எதனை நிறைவேற்றியுள்ளனர் என்கின்ற கேள்விகளை தொடுத்ததுடன் நான் எவ்வாறு அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பேன் என்பதையும் கேட்டனர். இத்தேர்தலில் நான் முதற்றடவையாக போட்டியிடுகிறேன். சுதந்திரத்துக்கு முன்னர் இருந்து இன்றுவரை ஐரோப்பிய நாடுகள் பல நாட்டு மக்கள் நலன்களுக்காக பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், தொழில் நுட்பங்களை உதவி வந்தன. ஆனால் அந்த உதவித் திட்டங்கள் உட்பட சகல உரிமைகளும் சம அளவில் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். இந்த நாடு ஒரு பௌத்த நாடு என்றும் சிங்கள மக்களே இந்த நாட்டின் உரிமையாளர்கள் என்றும், ஏனைய தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் சிறுபான்மையினர் என்றும் பிரித்தெடுக்கப்படுகின்றார்கள். இந்த நிலைமையை மாற்றியமைத்து ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதே எனது பிரதான நோக்கம்.

சிலோன், செரண்டிப் ஆகிய பெயர்களுடன் இந்த நாடு இருந்தபோது காணப்பட்ட அமைதியான வாழ்வையும் சுபீட்சத்தையும் இன்றைய எதிர்விளைவுகள், இனவாத சிந்தனைகள் முற்றாக அழித்தொழித்துவிட்டன.
இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான சிறிய, பெரிய சகல அரசியல் கட்சிகளும் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போராட்டமாகவே சித்திரிக்கின்றன. அவர்கள் ஏன் ஆயுதம் தூக்கிப் போராடுகின்றார்கள் என்புதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னரான இன்றைய காலகட்டம் வரை எமது சாத்வீக வழியிலான சகல உரிமைப் போராட்டங்களும் அழித்தொழிக்கப்பட்டதன் விளைவாகவே அவர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். எனவே அவர்களுக்கான சகல அரசியல் உரிமைகளும் கௌரவத்துடன் வழங்கப்பட்டால் இந்தநிலைமை எதுவும் உருவாகாது.
இந்த நாட்டில் வாழும் சகல இனங்களும் ஒரு குடும்பத்தினர்போன்று அமைதியாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும் என்பதே எனது இதயபூர்வமான விருப்பும், எதிர்கால இலக்குமாகும்.

இந்த நாட்டில் வாழும், இன்றைய போர்க்கால சூழலைப் பயன்படுத்தி சிறுபான்மையின மக்களுக்கு எதிராக பாலியல் வல்லுறவு, கைது, காணாமற்போதல் உட்பட பல வன்முறைச் சம்பவங்கள் மிக மோசமாக அதிகரிக்கப்படுவதுடன், மூடிமறைக்கப்படுகின்ற சம்பவங்களும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

1989களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது ஆயிரக்கணக்கான கொலைச் சம்பவங்களுக்குக் காரணமாக இருந்தவர் என்று கூறப்பட்ட ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இலங்கைக்குத் திரும்பிவந்துள்ளார். இது குறித்து அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தமை தாங்கள் அறிந்ததே.

இந்த நாட்டின் சட்டவிதிகளுக்கு அமைய குடிவரவு, குடியகல்வு சட்டவிதிகளின்படியே ஒருவர் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குச் செல்ல முடியும். ஆனால் சட்டவிரோதமாக நாட்டைவிட்டுத் தப்பியோடிய ஒருவர் சுதந்திரமாக இந்த நாட்டிற்குள் நுழைந்ததுடன் அவருக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலிருந்து ஐம்பதிற்கு மேற்பட்டோர் பாதுகாப்பு அளித்துவருவதாகவும் செய்தி ஊடகங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பிக்கும் பொது முன்னணி அரசுக்கும் உள்ள உறவு காரணமாகவே நாட்டைவிட்டு சட்டவிரோதமாகத் தப்பியோடி குற்றஞ் சுமத்தப்பட்ட ஒருவரின் வருகைக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது சட்டரீதியான, புறம்பான ஒன்றாகும்.
அமெரிக்க நகரங்கள் மீதான அண்மையில் நடந்த திடீர்த் தாக்குதல்கள் மூலமே உலகப் பயங்கரவாதம் என சர்வதேச சமூகம் விழித்துக்கொண்டது. ஆனால் அமெரிக்காவின் நேச நாடான பிரித்தானியாவிலேயே பயங்வரவாத சம்பவங்களுடன் தொடர்புடையவர் என குற்றஞ்சாட்டப்பட்ட சோமவன்ஸ அமரசிங்க 12 வருடங்கள் தங்கியிருந்தார் என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

சோமவன்ஸ அமரசிங்க போன்ற இனவாத சிந்தனை, வன்முறை அரசியல் நோக்குடைய வர்களுக்கு பிரிட்டன் ஏன் அரசியல் தஞ்சம் கொடுத்துள்ளது என்பதை இந்நாட்டு சமாதானத்தையும், அமைதியையும் விரும்பும் ஒவ்வொரு மக்களும் கேட்க விரும்புகிறார்கள்.




நன்றி.
தங்கள் உண்மையுள்ள

G.ஆனந்தகுமார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர்மீன் வகைகள், லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை), மோட்டார்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைககு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (95306)

**Black Stone** எஞ்சின் H.P.26 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா விமலராசா, தொல்புரம் மத்தி, சுழிபுரம். (மூட்டடி சந்தை அருகில்) (95326)

## தவறிவிட்டது

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரது கைச்சங்கிலி, 27.11.2001 அன்று யாழ்ப்பாணத்துக்கும் சில்லாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவாஸ் ஸ்ரூடியோ, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (95327)

கோகுலராஜா மதுஷன் என்பவரது விசேட அ.அ.(இல.091207116), பாடசாலை அடையாள அட்டை என்பன துரையப்பா விளையாட்டரங்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.59, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (95333)

இணுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி நித்தியானந்தபவானி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 498012116v) யாழ்.பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சோதி ரெக்ஸ்ரைல்ஸில் ஒப்படைத்து உதவவும். (95338)

26.11.2001 யாழ்.இலங்கை வங்கி மேற்தரக்கிளை (ஆஸ்பத்திரி வீதி) இற்கும், பஸ் நிலையம் சத்திரத்துச் சந்திக்கும் இடையே 1 1/2 பவுண் தங்கச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.யோகராசா **C/o** சி.சிவசுப்பிரமணியம், பள்ளியவத்தை, வல்வெட்டி மத்தி என்னும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (95343)

## ஜாதகக் குறிப்பு தேவை

எம்மிடம் எஞ்சினியர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள் ஆகியோரின் குறிப்புக்கள் உண்டு. அதற்குப் பொருத்தமான குறிப்புக்கள தேவைப்படுகின்றன. விரும்புவோர் குறிப்பு, புகைப்படம் என்பவற்றுடன் தொடர்புகொள்ளவும். மா.பாலசுப்பிரமணியம (சாரதா ஆச்சிரமம் அருகில்), தும்பளை, பருத்தித்துறை. (95322)

## இறைச்சிக்கோழி தேவை

சகலவிதமான இறைச்சிக்கோழிகளும் உடன் தேவை. தொடர்பு:- 19, முருகேசர் வீதி, முத்திரைச்சந்தியடி, நல்லூர். (95355)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த 26 வயது, செவ்வாய்க் குற்றமற்ற, பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கப்படுகின்றனர். ஜாதகக் குறிப்பு, குடும்ப விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விள.இல.1410, மே/பா உதயன். (95358)

## கருத்தரங்கு

இவ்வருடம் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களின் நலன் கருதி சுன்னாகம் றோட் டரக்ட் கழகம் முன்னோடிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணி முதல் நடைபெறவுள்ளது.

யூனியன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் தமிழ மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறப்பு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கருத்துரை வழங்குவர்.

2ஆம்திகதி காலை 9மணிக்கு விஞ்ஞான பாடம் சம்பந்தமான கருத்தரங்கு இடம்பெறும்.சகல பாடங்களுக்கும் கையேடுகளும் வழங்கப்படும். (க-152)

## ஒன்று கூடல்

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர்பாடசாலை வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் க.பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஓய்வு பெற்ற அதிபரும் எழுத்தாளருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) கலந்துகொள்வர். (க-152)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வேரதானை நாவலடி திருவருள்மிகு வைரவர் ஆலய புனரமைப்புக்கென நிதி உதவி வழங்கிய -



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்
மாண்புமிகு
K.N.டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.
க.மணிபல்லவராஜன் *(நிஷாந்தன்)*
அவர்களுக்கும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/19538) - தாவடியூர் மக்கள்.

## லயன்ஸ் சுகாதார தினம் - 01.12.2001

இத்தினத்தை அனுஷ்டித்து
**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**
தென்னிந்திய திருச்சபை - யாழ்.ஆயர்
அவர்களினதும்
இணுவில் லயன்ஸ் கழகத்தினதும் அனுசரணையுடன் நடத்தும்

### இலவச மருத்துவ முகாம்

காலம்:- 01.12.2001 (சனி) காலை 9.00 - 12.00 மணிவரை
இடம்:- பிரபல மக்லியட் வைத்தியசாலை, இணுவில்.
*இலவச சேவையை வழங்கவுள்ள வைத்திய நிபுணர்கள்:-*

*மகப்பேற்று நிபுணர்* டாக்டர் G.பவானி அவர்கள்
*வைத்திய நிபுணர்* டாக்டர் K.மகேசன் அவர்கள்

*மற்றும் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள்:-*
*சத்திரசிகிச்சைப் பிரிவு:-* டாக்டர் N.சிறிஸ்கந்தராஜா அவர்கள்
*மருத்துவப் பிரிவு:-* டாக்டர் K.இரத்தினசிங்கம் அவர்கள்

*குறிப்பு:-* வசதியற்றோருக்கான இம்முகாமில் வருகைதரும் ஒழுங்கின்படியே பரிசோதனை மேற்கொள்ளப்படும். **தென்னிந்திய திருச்சபையினால் மருந்து இலவசமாக வழங்கப்படும்.**

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, சேவை இணைப்பாளர்.
லயன் டாக்டர் நவமலர் கனகரத்தினம், கழகத்தலைவர்
(C/19544)

306 B SRI LANKA
SERVE TODAY FOR A BETTER TOMORROW

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001
## யாழ்.மாவட்டம்

இந்திய இராணுவம் யாழ்நகரில் நிலைகொண்ட காலத்தில் எதிரொலி எழுப்பியவரும், உள்ளூராட்சி நிர்வாகத்தில் சிறந்த அனுபவம் பெற்றவரும், யாழ்.மாநகரசபையின் ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் பல வருடங்கள் கடமையாற்றி, மக்களின் பல அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, பல திட்டங்களை அமுல்படுத்தியவரும், நிர்வாகத்தைத் திறம்பட இயக்குவதற்கு வழிவகுத்தவரும், ஓய்வூதியர்களின் பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் ஓய்வூதிய சம்மேளனத்தின் தலைவராக ஜனாதிபதி மட்டத்தில் எடுத்துரைத்து நிவாரணம் பெறுவதற்கு தொடர்ந்து சேவையாற்றிக் கொண்டிருப்பவரும், கூட்டுறவாளர்களின் நலனில் அக்கறை கொண்டவருமாகிய, நான்கு தமிழ்க்கட்சிக கூட்டமைப்பின் வேட்பாளரின் இல. 5 இற்குப் புள்ளடியிட்டு வெற்றிபெறச் செய்வோம்.



### திரு.சீ.வீ.கே.சிவஞானம்
**தமிழர் விடுதலைக் கூட்டணி**

| | |
|---|---|
| சின்னம் | (உதயசூரியன்) |
| இலக்கம் | 5 |

உள்ளூராட்சிச் சேவை,
ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்.
(94877)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 18 - 12 - 1930



உதிர்வு 31 - 10 - 2001

அமரர்
### செல்லத்துரை பாலசுப்பிரமணியம்
*(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்)*

*எமது குடும்பத் தலைவரும் அருமைத் தந்தையுமாகிய செல்லத்துரை பாலசுப்பிரமணியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபங்களையும், அஞ்சலிகளையும், இன்னும் வேண்டிய உதவிகளையும் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.*

*இன்று (30-11-2001) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் அதைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.*

★ தவறவிடப்பட்டவர்கள் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*"கார்த்திகை வாசா"*
*மயில உடையார் வளவு,*
*தெல்லிப்பழை வீதி,*
*வட்டுக்கோட்டை.*
(C/19540)
மனைவி, மக்கள், மருமக்கள்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### ப.கோபாலகிருஷ்ண ஐயர் (J.P.)

குருவருளாலும், திருவருளாலும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவராக இருந்து சீரிய பணியாற்றி, இன்று கலைத்துறைப் பீடாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் எமது அன்புக்கும், கௌரவத்துக்கும் உரிய பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் (J.P.) அவர்கள் சகல சம்பத்துகளுடனும் பல்லாண்டு பணிபுரிய உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாய்க்காற்றரவை,*
*பிள்ளையார் கோவில்,*
*நீர்வேலி.*
(95363)
அன்புக்குரிய பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள்.

## மரண அறிவித்தல்

### மாதர் வைத்திலிங்கம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்து வந்தவருமான மாதர் வைத்திலிங்கம் நேற்று (29-11-2001) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மாதர் - அம்மணி தம்பதிகளின் மூத்த மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கிரிசாம்பாள் (கலா), ரவீந்திரன் (ரவி - நவக்கிரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கனகம்மா, காலஞ்சென்ற அன்னலட்சுமி, சுப்பிரமணியம் (முன்னாள் ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்) மகாலிங்கம், காலஞ்சென்ற பொன்னுத்துரை (நாடகக் கலைஞர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தயாசீலன், சரோஜா (வனிதா - நவக்கிரி) ஆகியோரின் மாமனாரும், கஜிதா (வேம்படி மகளிர் கல்லூரி), தவக்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-11-2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.ரவீந்திரன் (ரவி - மகன்)
திருமதி குணபாலு தவமணிதேவி (மருமகள்)

*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*கச்சாய் வடலி,*
*சுன்னாகம்.*
(95366)

# நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்......

ஆண்டுகள் பல கடந்தாலும் நீண்டு கிடக்கிறது எம் நினைவுகளில் அந்த நாள்கள்!

எங்கள் சொந்தமண் கைவிடப்பட்ட பிரதேசமாகி உறவுகள் பலவும் வெளியேறி இருந்த அந்தக் காலம்!

கூப்பிடு தொலைவில், கண்களின் பார்வைக்கு எட்டிய தூரத்தில் யாழ்ப்பாணம் காட்சி தந்த போதும் ஓடி வர முடியாமல் கண்ணீர் விட்டுக் கவலைப்பட்ட அந்த வேளை!

எங்களைத் தேடி வந்து சேவை செய்தவர்கள் ஈ.பி.டி.பியின் தெய்வங்கள்! உணவு முதல் உடனடித் தேவைகள் வரை பூர்த்தி செய்ய தொண்டர்கள் முதல் தலைவர் பட்ட சிரமங்கள் நாமறிவோம்!

கப்பல் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தந்து இருண்ட அந்த ஐந்து வருடங்களும் எங்கள் உயிர் வாழ்வுக்கு உத்தரவாதம் செய்தமையை நாம் மறவோம்!

"ஜரிஸ் மோனா" பயணிகள் கப்பல் கடத்தப்பட்ட போது கை கட்டிப் பார்த்திருந்தவர்களின் ஈனச் செயலை நாம் மன்னிக்க மாட்டோம்!

அன்று கேந்திர முக்கியத்துவம் இல்லாத தீவுப் ப்குதிகளில் இன்று வாக்கு வேட்டையாட முற்படும் வேட்பாளர்களுக்கு ஒருவார்த்தை!

எங்கள் பெண்களை இழித்தும், பழித்தும் வீண் வார்த்தை பேசி விட்டு எங்கள் வாக்குகளைக் கேட்பது என்ன நியாயம்?

எங்கள் உறவுகளையும், உடைமைகளையும் கைவிட்டு நிர்க்கதி நிலையிலிருந்த போது எட்டியும் பார்க்காத உங்களுக்கு எங்களிடம் வாக்குக் கேட்க என்ன உரிமை இருக்கிறது?

எங்கள் வாழ்க்கை நலனில் துளியளவும் அக்கறை இல்லாமல்

எங்கள் துயரம் தோய்ந்த நாள்களில் திரும்பிப் பார்க்காமல்

எங்களின் இன்றைய அமைதி வாழ்வுக்கும் கேடு விளைவிக்க முயல்கிறீர்கள். வேண்டாம் இந்த விஷப் பரீட்சை!

எங்கள் இதயக் கோயில்களில் நாங்கள் பூஜிக்கும் எங்கள் காவலர்களை,

எங்கள் வீடுகளில் எங்களை வாழவைக்கும் எங்கள் தெய்வங்களை,

எவரும், எங்கும் கொச்சைப்படுத்த வேண்டாம்.

சொற்களாலோ, செயல்களாலோ களங்கப்படுத்த வேண்டாம்.

இது எச்சரிக்கையல்ல ஆலோசனை மட்டுமே.

ஏனெனில் சாது மிரண்டால் காடு கொள்ளாது.

தீவக கடற்றொழிலாளர் வடக்கு சமாசம்,
தீவக கடற்றொழிலாளர் தெற்கு சமாசம்.

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)**

X

(94879)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## திருமதி கமலாசனி யோகநாதன்

*(sp. trd. social study S.L.P.S. 2-II)*

எமது பாடசாலையின் அதிபர் திருமதி கமலாசனி யோகநாதன் அவர்கள் 2000. 08. 04 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் அதிபர் தரம் 2-II இற்குப் பதவி உயர்வுபெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன், அவர்தம் சேவையில் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்கள்,
யா/கெற்பேலி அ.த.க. பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை.

(C/19539)

---

# யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பரிசுத்தினம் - 2001

நேற்று நடைபெறவிருந்த பரிசுத்தினம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் *இன்று (2001.11.30) வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.* முதன்மை விருந்தினராக யாழ்.கல்விவலயம் 1 இன் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.த.அருணகிரிராஜாவும், அவர்தம் பாரியாரும் கலந்துகொள்வர்.

குறிப்பு : க.பொ.த. (சா.த) மாணவர்களின் அனுமதி அட்டையும், சகல மாணவர்களின் தேர்ச்சி அறிக்கையும் காலை 9.00 மணிக்கு வழங்கப்படும். சகல மாணவர்களும் வருகை தரவும்.

- அதிபர்.

(C/19543)

---

# விற்பனைக்கு உண்டு

இதோ வந்துவிட்டது! 2002ஆம் ஆண்டுக்கான பலரகங்களில் உள்ள றோல் கலண்டர்கள் எம்மிடம் தரமான, நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. அத்துடன் போட்டோ கொப்பி Canon, Sharp இவற்றுக்குரிய உதிரிப்பாகங்களும் மற்றும் Tonor உம் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:-* C.S.மூர்த்தி, குமரன் விருதி,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(95359)

---

# மரண அறிவித்தல்

திருமதி

## சண்முகரத்தினம் இராசமணி (மணி)

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கடந்த (21.11.2001) புதன்கிழமை அன்று விசுவமடுவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகரத்தினத்தின் அன்பு மனைவியும் ஜெயந்தன், ஜெயந்தி, தமயந்தன், அஜந்தன், காலஞ்சென்ற தமயந்தி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தில்லைநாதன்
(தேவன்)

*டச்சு வீதி,*
*உடுவில்.*

(95357)

---

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.30

பிள்ளையார்கதை நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறும். இந்நூலை பண்டிதமணி மு.கந்தையா வெளியிட்டுவைப்பார்.

சிறப்புரையை ஆறு.திருமுருகனும், பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளையும், வாழ்த்துரையை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் நிகழ்த்துவர்.

இந்நிகழ்வில் சிவத்திரு. சு.வைத்தீஸ்வரக் குருக்கள் கௌரவிக்கப்படவுள்ளார். (க-ரி)

# சாவகச்சேரி அறநெறிப் பாடசாலை உரும்பிராயில்

தென்மராட்சி,நவ.30

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழநி ஆண்டவர் ஆதரவுடன் நடத்தப்பட்டு வந்த அறநெறிப் பாடசாலை, மீண்டும் கடந்த வாரம் தொடக்கம் உரும்பிராய், கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக இராச ஒழுங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை வகுப்புகள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபைச் செயலாளர் ம. விவேகானந்தன் அறிவித்துள்ளார். (க-117)

# புத்திரர் இருவரையும் தந்தையையும் காணவில்லை!

மன்னார்,நவ.30

மன்னார் மாவட்டம் பேசாலையில் இருந்து அண்மையில் கொழும்புக்குச் சென்ற மூவரைக் கடந்த 2 வாரங்களாகக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு முகாமில் முறைபபாடு செய்யப்பட்டிருக்கிறது.

பேசாலையைச் சேர்ந்தவரான ஜேக்கப் பிரான்ஸிஸ் (வயது68) அவருடைய புத்திரர்களான பிரான்சிஸ் ரவீக்சன் (வயது 37), பிரான்ஸிஸ். அன்ரனி (வயது 27) ஆகியோரே காணமற்போய் விட்டதாக முறையிடப் பட்டிருக்கிறது. (க-4)

---

**PERSONAL CLASS**

வணிகக் கல்வியும் கணக்கீடும்

புதிய பிரிவுகள்
*O/L - 2002*
*Grade - 10*

A/L 2003 வங்கிக்கணக்கு இணைக்கக் கூற்று

ஆரம்பம்:- 03-12-2001
திங்கள் காலை 7.00 a.m.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர்:
S.K.ATPUTHARAJAH *(B.Com.)*
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

(95353)

---

**A/L 2002**

**துரித மீட்டல்**

பரிவு II ஆரம்பம்
**29.11.2001 (9 மணி)**
புதிய உயர் கல்லூரி
*ஆரியகுளம் சந்தி, யாழ்.*

(95312)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1928 - 10 - 01



உதிர்வு 2000 - 12 - 12

## திருமதி பூமணி சபாபதி

**திதி:** நாளை (01-12-2001) சனிக்கிழமை

அன்போடு எம்மை அரவணைத்து
வளர்த்த எம் அன்பு அம்மாவே!
எம்மைப் பிரிந்து இன்று
ஓராண்டு மறைந்தாலும் அம்மாவை
ஒருபோதும் மறவோம் நாம் - நீ சாந்திபெற.

*"தேவிவாசா",*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/19541)

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 10 - 11 - 1915



உதிர்வு 31 - 10 - 2001

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னப்பு

*(ஓய்வுபெற்ற சிங்கப்பூர்த் துறைமுக பிரதான காசாளர், வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய நிர்வாகக் குழு உறுப்பினர்.)*

31.10.2001 அன்று சிவபதமடைந்த, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வர்த்தலைவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட, கணபதிப்பிள்ளை சின்னப்பு ஆகிய எமது பேரனாரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (01.12.2001) சனிக்கிழமை நடைபெற இருப்பதனால் இந்தநிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*[illegible] ஆச்சிரம வீதி,*
*[illegible]*
*பருத்தித்துறை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
செல்வி சி.லலிதாம்பிகை (மகள்),
பேர்த்தி பாமாவதி பாலசுப்பிரமணியம்.

(95320)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் தம்பு ஆறுமுகம்

எமது கலாசாலை முதலாம் வருட விஞ்ஞான நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி செல்வி வசந்தா அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் தம்பு ஆறுமுகம்

அவர்கள் சென்ற 31.10.2001இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

(95361

---



# யார் இவர்...?

இளைய தமிழ்ச் சமுதாயமே!
யார் என்று இவரைத் தெரிகின்றதா?
விவரம் நாளைய உதயனில்!

- மானமுள்ள தமிழன்.

(C/19542)